# ஈழமும் இந்து மதமும் - பொலநறுவைக் காலம்
## (கி.பி.1000—1250)

சி. க. சிற்றம்பலம்

ஈழவரலாற்றில் பொலநறுவைக் காலம் ஒரு திருப்புமுனையாக அமைந்தது எனலாம். அரசியற்றுறையை நோக்கும்போது இந்நாட்டில் ஏற்பட்ட தமிழ்ப் படைஎடுப்புகள் உக்கிரமடைந்து காணப்பட்டதோடு பொலநறுவை ராசதானியின் வீழ்ச்சியில் இதுவரை ஒரு தலைநகரை மையமாக வைத்து ஆண்ட மரபு மறைய, பல்வேறு தலைநகர்களை அமைத்து ஆளும் மரபு தலைஎடுத்ததோடு வடபகுதியில் சுதந்திரத் தமிழ் அரசின் எழுச்சியும் கருக்கட்டிய காலமாகவே இக்காலம் அமைகின்றது. கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முன்பிருந்தே தமிழகத்திலிருந்து ஈழத்தின்மீது படைஎடுப்புகள் மேற்கொள்ளப்பட்டாலும்கூட அநுராதபுர காலத்தின் பிற்பகுதியில் அதுவும் குறிப்பாக கி.பி. 8ஆம், 9ஆம், 10ஆம் நூற்றாண்டுகளில் உக்கிரம் அடைந்தன. இத்தகைய நிலைக்கு மன்னர்களது வலிமையின்மை மட்டுமன்றித் தமது அதிகாரத்தை வலுப்படுத்துவதற்குத் தென்னிந்திய படைப்பிரிவினர் தயவிலே தங்கியிருக்க வேண்டிய நிலையும் முக்கிய காரணியாக அமைந்திருந்ததும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். அத்துடன் படைஎடுத்தவர்கள்கூட இந்நாட்டிற்கு அழிவை ஏற்படுத்தத் தவறவில்லை எனவும் சூளவம்சம் குறிப்பிடுகின்றது. உதாரணமாக, முதலாவது சேனன் (கி.பி.831–51) அநுராதபுரத்தில் அரசாட்சியை மேற்கொண்டபோது சிறீ மாற சிறீவல்ல என்பவன் தலைமையில் இங்கு வந்த தமிழர் படை இங்குள்ள தமிழர்களது ஆதரவோடு நகரைச் சிதைக்க அந்நகர் யக்ஷர்களால் சூறையாடப்பட்ட நகர்போன்று காட்சி கொடுத்தது எனச் சூளவம்சம் குறிப்பிடுகிறது. இவ்வாறேதான் இவனுக்குப் பின்னர் ஆட்சிபீடமேறிய மன்னர் பலரும் வலிமையற்றவர்களாகக் காணப்பட்டனர். மூன்றாவது உதயன் (கி.பி.945–53) காலத்தில் பராந்தக சோழனின் படைஎடுப்பு நிகழ்ந்தது. உதயன் ஒரு சோம்பேறி மட்டுமல்ல, குடிகாரனும்கூட. நான்காவது மகிந்தன் காலம் ஓரளவு அமைதி காணப்பட்ட காலமாக விளங்கினாலும்கூட, பின்வந்த ஐந்தாவது சேனன் (கி.பி.972–81), ஐந்தாவது மகிந்தன் (கி.பி.981–1017) போன்றோர் வலிமையற்று இருந்ததோடு இவர்கள் காலத்தில் ஈழத்திலுள்ள திராவிடப் படைப்பிரிவினரின் கையும் ஓங்கியிருந்தது. இப்படையினர் கலகத்துக்கஞ்சி மகிந்தன் ரோகணைக்கு ஓடவேண்டியிருந்தது. படையில் மட்டுமன்றிப் பொதுவாகவே தமிழர் செல்வாக்கு அநுராதபுர கால அரசின் இறுதிக் காலத்தில் மேலோங்கியிருந்தது. தமிழர் வசமிருந்த நிலங்கள் 'தமேழத்வலதெமின்' எனவும், தமிழர் வசித்த கிராமங்கள் 'தமெல்—கம்மின்' எனவும் தமிழரிடமிருந்து பெறப்பட்ட வரி 'தமெலகுழி' எனவும் இக்காலச் சான்றுகளில் குறிக்கப்பட்டுள்ளன. இத்தகைய சூழ்நிலையில்தான் தென்னிந்தியாவில் பேரரசமைத்த சோழர் ராஜராஜன் தலைமையில் (கி. பி. 985–1016) ஈழத்தின்மீது படைஎடுத்தனர்.

முதலாவது ராஜராஜன் தலைமையில் ஈழத்தின்மீது மேற்கொள்ளப்பட்ட படைஎடுப்பு இதுவரை நிகழ்ந்த படைஎடுப்புகளைவிடப் பல வழி

களிலும் வேறுபட்டிருந்தது. அநுராதபுரம் தலைநகராக இருக்கும் நிலைக்கப்பால் சிதைக்கப்பட்டது மட்டுமன்றித் தலைநகர் பொலநறுவைக்கு மாற்றப்பட்டது. அநுராதபுர காலத்தில் வெறும் இராணுவத் தளமாக விளங்கிய பொலநறுவை இவனால் தலைநகராக்கப்பட்டதன் நோக்கம் இது மையப் பிரதேசமாக இருந்ததால் இதன்மூலம் ஈழம் முழுவதையும் ஆட்சி செய்தலே. அத்துடன் இதுவரை வந்த படைஎடுப்புக்களும் ஈழம் முழுவதும் ஆட்சி செய்தாலும்கூட சோழப் பேரரசர் ஈழத்தைத் தமது கடல் கடந்த பிரதேசங்களில் ஒன்றாகக் கருதி (9ஆவது மண்டலமாக்கி) தமது ராசப் பிரதிநிதிமூலமாக ஆள முற்பட்டனர். இதனால் முதல்முதலாக நம் நாடு சுதந்திரமிழந்தது. இது கி.பி.1070ஆம் ஆண்டுவரை சோழப் பேரரசின் ஒரு அங்கமாக இருந்ததோடு தஞ்சையைத் தலைநகராகக் கொண்ட இவ்வரசின் ஆணையை ஏற்ற அரசாகவும் விளங்கியது. இவ்வாறு முக்கால் நூற்றாண்டாக ஏற்பட்ட அரசியல்தாக்கம் பொருளாதார, கலாச்சாரத் துறைகளில் முன்னெப்போது மில்லாத அளவுக்குப் பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தியது எனலாம். இதனை மனதிற் கொண்டே பேராசிரியர் அரசரத்தினம் அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார். 'சோழர்கள் தோற்கடிக்கப்பட்டுச் சிங்கள அரசர்களின் அதிகாரம் மீண்டும் நிலைநாட்டப்பட்ட பொழுதிலும் தமிழர்களது செல்வாக்கு ஒழிந்துவிடவில்லை. தமிழர்களது எண்ணிக்கைப் பெருக்கமும் அவர்களது பொதுவான செல்வந்த நிலையும் படைத் துறையிலும் நிருவாகத் துறையிலும் அவர்கள் வகித்த செல்வாக்கான பதவிகளும் இதனைச் சாத்தியமற்றதாக்கி விட்டன.' (Arasaratnam, S. 1964 :103) சோழர் ஆட்சி நடைபெற்றபோது தமிழர்கள் பெருளவுக்கு இந்நாட்டில் குடியேறினர். இவர்களில் படைவீரர்கள், வணிகர்கள், கலைஞர்கள், நிருவாகிகள், பிராமணர்கள் போன்றோர் கணிசமான தொகையினராகக் காணப்பட்டனர். சோழர் காலம் தமிழகத்தில் அரசியல் வரலாற்றில் மட்டுமன்றி கலாச்சார வரலாற்றிலும் ஒரு முக்கிய காலகட்டமாக விளங்கியதால் அக்கலாச்சார வளர்ச்சியின் அம்சங்கள் பல முன் எப்போதுமில்லாத அளவுக்கு இந்நாட்டிற்குள் புகுவதற்கான வாய்ப்பை இவர்கள் ஆட்சி நல்கியதோடு அவை நிரந்தரமாக நீடித்து நிலைக்கவும் வழிசமைத்தது. சுருங்கக்கூறின் பல்லவர் காலத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட கலாச்சார மறுமலர்ச்சி முதிர்ச்சிகொண்ட காலமே சோழர் காலமாகும். இம்முதிர்ச்சியின் அச்சாணியாகக் கோயில் விளங்கியது. சோழர் காலத்தில் இக்கோயில் ஒரு நிறுவனமாகி, இந்து கலாச்சாரத்தின் பொக்கிஷமாக மேன்மை பெற்றது. இத்தகைய சிறப்புக்கள் நம்நாட்டையும் அடைந்த காலம்தான் சோழர் இங்கு ஆட்சி செய்த காலம் எனலாம். இதனாற்றான் பொலநறுவைக் காலத்தின் சோழர் ஆட்சி இந்து மத வரலாற்றைப் பொறுத்தமட்டில் ஒரு மைல்கல்லாக அமைந்துவிடுகிறது எனலாம். (Sitrampalam, S. K. 1984)

சோழரால் மட்டுமன்றி இவர்களைக் கலைத்து அரசாட்சிசெய்த சிங்கள மன்னர்கள் ஏற்படுத்திய மணத்தொடர்புகளும் இந்து மதத்தின் செல்வாக்கை மேலோங்க வைத்தன. பொதுவாகச் சோழர் இங்கு ஆட்சி செய்த காலத்தில் அவர்களின் எதிரிகளாகிய பாண்டிய வம்சத்தவரோடு மணத்தொடர்புகளை ஏற்படுத்துவதில் சிங்கள அரச வம்சத்தினர் மகிழ்ச்சி அடைந்தனர். இதனால் 11ஆம் நூற்றாண்டிலே ரோகணையில் பாண்டிய

வம்சத்தவர்களாகிய விக்கிரம பாண்டியன், பராக்கிரம பாண்டியன் ஆகியோர் அரசாட்சி செய்ய முடிந்தது. சோழரிடமிருந்து அரசியலாதிக்கத்தைக் கைப்பற்றிய முதலாவது விஜயபாகுவின் சகோதரியாகிய மித்த ஒரு பாண்டிய இளவரசனை மணம் முடித்தாள். இவர்களது பிள்ளைகள் தான் மானபர்ணன், கீர்த்திசிறீமேகன், சிறீவல்லபன் ஆவர். பொலநறுவை அரசின் பெருமன்னனுகிய மகாபராக்கிரமபாகு மானபர்ணனின் மகனுனதால் பாண்டியவம்ச வழித்தோன்றல் என்பதும் ஈண்டு மனதிற் கொள்ளற்பாலது. தமிழகத்தோடு மட்டுமன்றிக் கலிங்க நாட்டுடனும் சிங்கள மன்னர் நெருங்கிய மணத் தொடர்பை கி. பி. 10 ஆம் நூற்ருண்டிலிருந்து ஏற்படுத்தியிருந்தனர். இதனுல் இந்துக்களாகிய கலிங்க வம்சத்தவரின் செல்வாக்கு சிங்கள அரண்மனையில் விதந்து காணப்பட்டது. முதலாவது விஜயபாகுவின் இரு அரசிகளான லீலாவதி, திரிலோகசுந்தரி ஆகியோரும் இந்திய வம்சத்தவரே. இவர்களில் கலிங்கத்திளவரசியாகிய திரிலோகசுந்தரி மிகவும் செல்வாக்குடன் விளங்கியவள். இவளது இந்து மத நடவடிக்கைகள் பௌத்த குருமாரையே சீற்றங்கொள்ள வைத்ததால் அவர்களது முறைப்பாட்டை ஏற்று விஜயபாகு "விகாரைகளின் அமைதியான வாழ்க்கையைக் குலைத்த தனது சொந்த இராணியையே தண்டிக்கும் முகமாக அவளின் வருமானங்களைப் பறிமுதல் செய்ததோடு அவளின் கழுத்தில் இரும்புச் சங்கிலியை மாட்டி நகரத்துக்குள் அவள் இழுத்துச் செல்லப்படுமாறு உத்தரவிட்டான். இதன்மூலம் அவன் பௌத்த சங்கத்தைச் சாந்தப்படுத்தியதோடு பௌத்த சங்கத்தின்மீது தான் கொண்டுள்ள பயபக்தியையும் உலகிற்கு எடுத்தியம்பினுன்'' என சூளவம்சம் கூறுகிறது. (C. V. LX: 54 - 55) விஜயபாகுவின் பின்னர் ஆண்ட விக்கிரமபாகு II (கி. பி. 1112 – 1132), கஜபாகு II (1132 – 1153) ஆகியோர் இந்துக்களாக விளங்கியதோடு கலிங்கரின் உதவியுடன்தான் அரசாட்சியும் செய்தனர். இவ்விருவரும் இந்துக்கள் என்ற காரணத்திற்காகச் சிங்கள அரசருக்கு நடைபெறும் பட்டாபிஷேக விழாக்கூட இவர்களுக்கு நடத்தப்படவில்லை. (Kiribamune, Srima. 1976) மகாபராக்கிரமபாகுவின் மனைவிகளில் ரூபாவதி கலிங்க இளவரசியாகும். லீலாவதி பாண்டிய இளவரசி என்பதும் குறிப்பிடத்தக்கது. இவளே பராக்கிரமபாகுவின் பட்டத்து மகிஷியாவாள். பராக்கிரமபாகுவின் சகோதரியின் மகனுன இரண்டாவது விஜயபாகு தொடக்கம் மாகன்வரை (கி. பி. 1184 – 1215) கிட்டத்தட்ட அரைநூற்ருண்டு காலம் பொலநறுவையில் பன்னிரண்டு அரசர்களும் இரு அரசிகளும் அரசாட்சி செய்தனர். இவர்களில் பதின்மர் கலிங்க வம்சத்தவராவர். ஒருவர் பாண்டியர். ஒருவர் மட்டுமே சிங்கள வம்சத்தவர். இதனுல் இக்காலத்தைக் கலிங்கவம்சகாலம் என அழைப்பதும் உண்டு. எவ்வாருயினும் கலிங்க வம்சத்தவர்கள் தாம் இந்துக்களாக இருந்து ஆட்சிசெய்தபோதும் பௌத்த மக்களின் அனுசரணையைப் பெறப் பலவாறு முயன்றனர். இத்தகையோரில் நிஸங்கமல்லன் (1187-1196) குறிப்பிடத் தக்கவன். இவனின் தந்தை பெயர் ஜெயகோபன். தாய் பெயர் பார்வதி. இந்துமதச் செல்வாக்கு அதிகரித்த இக்காலத்தில் அதை மறைப்பதற்கும், தான் பௌத்தர்களின் நண்பன் என்பதை வெளிக்காட்டவும் கல்வெட்டுக்களில் தனது கருத்துக்களை வெளியிடத் தவறவில்லை. உதாரணமாக பொலநறுவையில் கிடைத்த கல்பொத்த கல்வெட்டில் 'பௌத்தர்களல்லாத சோழர்கள், பாண்டியர்கள் பௌத்த சாசனத்தின் எதிரிகள்'

(E. Z. II: 98–123) எனக் கூறிப் பிறிதோரிடத்தில் 'பௌத்த மதத்திற்கே சொந்தமான ஈழநாட்டினைப் பரிபாலிக்க சோழ, கேரள மற்றும் ஏனைய பகுதிகளிலுமுள்ள பௌத்தர்களல்லாதவர்களைத் தெரியக்கூடாது என்றும் இவர்களோடு சேர்ந்து அழிவினை ஏற்படுத்துவோர் துரோகிகளே' (E. Z. II: 157–164) எனவும் விளக்கிறன். இத்தகைய குறிப்புக்கள் பொலநறுவையில் நிலவிய அரசியல் ஆதிக்கப் போட்டியையும் அதில் இந்துக்கள் பெற்ற முக்கியத்துவத்தையும் எடுத்துக்காட்டுவதோடு இந்து மன்னர்கள் பௌத்தர்களது ஆதரவைப் பெற மேற்கொண்ட நடவடிக்கைகளையும் எடுத்தியம்புகின்றன.

மாகனது படையெடுப்பும் (கி.பி.1215–1255) பொலநறுவையில் அவனது அரசாட்சியும் பொலநறுவை அரசின் இறுதிக் கட்டமாக அமைந்ததோடு அதனதும் பௌத்த மதத்தினதும் சிதைவுக்கும் வழிகோலியது. இவனது படைகளில் தமிழரும் கேரளரும் விதந்து காணப்பட்டனர். கலிங்க வம்சத் தவனுகிய இவன் வீரசைவசமயப் பிரிவைச் சார்ந்தவன் ஆகும். இவனது படையெடுப்பு நிகழ்ந்த காலத்தில் இங்குள்ள நிலையை மினிப்பேயில் கிடைத்த கல்வெட்டும், சூளவம்சமும் சிறப்பாக எடுத்துரைக்கின்றன. இவனது படையெடுப்புக்கு நான்கு ஆண்டுகட்கு முன்னர் எழுதப்பட்ட மினிப்பே கல்வெட்டு 'தமிழ் ஆக்கிரமிப்பாளர் முழுச் சமூக அமைப்பையும் சமய நிறுவனத்தையும் அழித்தனர்' எனச் கூறச் சூளவம்சம் (C.V.LXXX: 54–56) 'ஈழத்து வாசிகளின் பல்வேறு தீயசெயல்களின் ஒட்டுமொத்தமான கூட்டின் விளைவாக ஈழத்தைப் பாதுகாக்கும் பணியை மேற்கொள்ள வேண்டியிருந்த தேவதைகள் அதனைச் செய்யத் தவறி விட்டனர். இதனல் பொய்யான மதத்தினைத் தழுவி இருந்த ஒருவன் (மாகன்) ஈழத்திற்கு வந்துசேர்ந்தான்' எனக் கூறுகிறது. இந்துவாகிய மாகனின் சமய நடவடிக்கைகளின் தாக்கத்தைப் பேராசிரியர் மலலசேகரா சற்று விரிவாக மிகைபட எடுத்தியம்பியுள்ளார். (Malalasekera, G. P. 1928 : 206) அஃதாவது. 'அவனது ஈவிரக்கமற்ற கொள்ளைக்காரர் நாடு முழுவதிலும் சூறையாடுதலிலும், கற்பழித்தலிலும், சித்திரவதை செய்து இம்சைப்படுத்துவதிலும், கொலை செய்வதிலும் ஈடுபட்டனர். எளிமையான மஞ்சள் காவி உடைகூட இந்த மலபார் கூலிப்படையிலிருந்து பாது காப்பைப் பெறமுடியாதிருந்தது. மிகப் புனிதமான பௌத்த கோயில்களின் புனிதத்தன்மைகூடக் கெடுக்கப்பட்டு அழிக்கப்பட்டது. பௌத்த சமயம் படிப்படியாக அழிக்கப்பட்டமையையும், பௌத்த கோயில்கள் சூறையாடப் பட்டமையையும், பௌத்த பிக்குகள் வெளியேற்றப்பட்டமையையும், புனித மான எல்லாவற்றினதும் புனிதத்தன்மை கெடுக்கப்பட்டமையையும் மகா வம்சமும் ராஜரட்ணகாராவும் துயரத்தை ஊட்டக்கூடிய முறையில் மிக விரிவாக எடுத்துக் கூறுகின்றன. இவர்களின் கைகளுக்கு அகப்பட்ட நூல் களும் ஆவணங்களும் குவிக்கப்பட்டு எரிக்கப்பட்டன. முழுத்தீவுமே தீப் பிடித்தெரியும் ஒரு வீட்டைப் போன்றோ அல்லது ஈமக்கிரியைகள் நடை பெறும் இருள் சூழ்ந்த ஒரு வீடு போன்றோ காட்சியளித்தது.'

எனவே அரசியல் ரீதியில் நோக்குகின்றபோது பொலநறுவைக் காலம் மூன்று காலகட்டங்களாக அமைகின்றது எனலாம். இதன் ஆரம்பகட்டம் சோழராட்சியுடன் தொடங்குகிறது. இக்காலத்தில் இந்து மதம் அரச மத

மாக விளங்க இந்து கலாச்சாரம் மேலோங்கியது. இரண்டாவது கட்டம் சுதேச மன்னர் காலமாகும். இதில்கூட இரு பகுதிகள் உண்டு. சிங்கள மன்னர் காலம் ஒரு பகுதி; கலிங்கவம்ச மன்னர் காலம் மற்றைய பகுதி ஆகும். சிங்கள மன்னர் காலத்தில் சோழர் விட்டுச்சென்ற இந்து நிறுவனங்கள் வளர்ச்சி கண்டன. இவர்களது மணத்தொடர்புகளும் பிறவும் இதற்கு உதவின. கலிங்கவம்ச காலம் மறுபடியும் இந்து மன்னரின் செல்வாக்கை முன்வைத்தது. இறுதிக்கட்டம்தான் மாகன் காலமாகும். சோழர்களைப் போலல்லாது மாகனின் நடவடிக்கைகள் பௌத்த மதத்தினைச் சிதைத்ததோடு இந்து மதத்தினது செல்வாக்கு மேலோங்கவும் வழி வகுத்தது.

இக்காலத்தில் வெறும் அரசியல் ஆதிக்கத்தால் மட்டும் இந்து மதம் மேலோங்கவில்லை. வணிகத்துறையில் தமிழகத்திற்கும் ஈழத்திற்கும் இடையே நிலவிய நெருங்கிய தொடர்பும் இந்து மத வளர்ச்சிக்கு வணிகர்களின் ஆதரவைப் பெற்றுத் தந்தது. கி.பி. 10ஆம் நூற்றாண்டிலிருந்து ஈழ — இந்திய வர்த்தகம் தமிழ் வணிகக் குழுக்களினது கையிலேதான் இருந்தது. ஈழத்தின் பல பகுதிகளிலும் வர்த்தக நடவடிக்கைகளுக்காகக் குடியேறிய இவ்வணிகக் குழுவினர் சுயாட்சி கொண்ட பட்டினங்களை அமைக்குமளவுக்குப் பலமும், அதிகாரமும், செல்வாக்கும் பெற்றிருந்தனர். உதாரணமாக பதவியாவில் இவர்கள் அமைத்த இத்தகைய பட்டினமொன்று 'ஐயம்பொழில்' பட்டினம் என அழைக்கப்பட்டது. (Veluppillai, A. 1972 : 20) இவ்வணிகக் குழுக்களில் திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர், வீரவளஞ்சியர், நானாதேசிகள், நகரத்தார், வீரக்கொடியார் போன்றோர் குறிப்பிடத் தக்கவர்களாவர். இவர்களது தமிழ்க் கல்வெட்டுக்கள் அநுராதபுரம், பொலநறுவை, பதவியா, புளியங்குளம், ஆனஉளுந்தாவை, வாஹல்கட, விஹாரேகின்ன இலக்கட்டுபெ போன்ற இடங்களில் கிடைத்துள்ளன. (இந்திரபாலா, கா. 1972 : 54-55). இத்தகைய வணிகக் குழுக்களது நடவடிக்கைகள் தென்னகம், ஈழம், தென்கிழக்காசியா போன்ற பிராந்தியங்களை உள்ளடக்கியிருந்தன. ஈழத்தில் தமது வர்த்தக நடவடிக்கைகளைப் பாதுகாக்க இராணுவப் பிரிவினரையும் தமது பொறுப்பில் வைத்திருந்தனர். காலகதியில் அரசர்கூட இவ்விராணுவப் பிரிவினரின் உதவியை நாடினர். இதனால் பொலநறுவைக் காலத்தில் வணிகரது மட்டுமன்றி, இராணுவப் பிரிவினரதும் சமய நடவடிக்கைகளும் இந்து மத வளர்ச்சிக்கு உதவின எனலாம். சோழராட்சிக் காலத்தில் ஈழத்தில் வேளைக்காரர், அகம்படியார், அணுக்கர் போன்ற இராணுவப் பிரிவினர் இயங்கினர். சோழராட்சி மறைந்தாலும்கூட சிங்கள மன்னராட்சியில் இவர்கள் செல்வாக்குப் பெற்றிருந்தனர் என்பதை ஓரிரு உதாரணங்களால் விளக்கலாம். முதலாவது விஜயபாகு சோழ நாட்டின் மீது படைஎடுக்க முயற்சிகளை மேற்கொண்டபோது அவனது வேளைக்காரப் படையினர் கிளர்ச்சி செய்து அரசமாளிகையை எரித்துப் பொலநறுவை நகரின் சுற்றுடலைச் சூறையாடி, இப்படைஎடுப்புக்குப் பொறுப்பாக இருந்த இரு தளபதிகளையும் கொலை செய்தனர். விஜயபாகு மன்னன் கூட தனது உயிரைப் பாதுகாக்க றுகுணைக்குச் செல்ல வேண்டியிருந்தது. இத்தகைய கிளர்ச்சிக்குக் காரணம் தமிழ் இந்துக்களாகிய இவர்கள் தமது சகபாடிகள்மீது படைஎடுப்பதை விரும்பவில்லை என்பதே. இது மட்டுமன்

றிச் சிங்கள அரசவம்சத்தின் ஆளுமைக்குரிய சின்னமாகிய தந்ததாதுக் கோயிலைப் பாதுகாக்கும் பணியைக்கூட இவர்கள் மேற்கொண்டிருந்த பொறுப்பொன்றே இவர்கள் அரசர்களின் நம்பிக்கைக்குரியவர்களாக விளங்கியதையும் இவர்களது செல்வாக்கையும் எடுத்தியம்புகின்றது. இவ்வாறு அரசியல், வணிக, இராணுவப் பிரிவினரின் பங்களிப்பில் வளர்ச்சி பெற்ற இந்து மதம் இக்கால நிர்வாகிகள், பிராமணர், கலைஞர்கள், மக்கள் ஆகியோரது ஆதரவு பெற்றும் வளர்ச்சியடைந்தது. இதனால் முன்எப்போதுமில்லாத அளவுக்குப் பரந்த முறையில் வளர்ச்சி பெற்ற இந்து மதம் ஈழத்தில் ஒரு நிரந்தரமான இடத்தைப் பெற்றதோடு, பௌத்த மதத்தோடு பிணைந்து வளரவும் இக்காலம் வழி வகுத்தது எனலாம்.

முதலாவது ராஜராஜனால் ஈழத்தின் வடபகுதி கைப்பற்றப்பட இவனது மகனாகிய முதலாவது ராஜேந்திரனால் ஈழம் முழுவதும் (கி. பி. 1017) கைப்பற்றப்பட்டது. இவர்கள் ஆட்சி கி. பி. 1070 ஆம் ஆண்டு வரை நீடித்தது. ஈழம் சோழப் பேரரசின் ஒன்பதாவது, மாகாணமாக விளங்கி 'மும்முடிச் சோழமண்டலம்' என அழைக்கப்பட்டது. இதை நிருவகிக்கச் சோழ நாட்டிலிருந்து இராசப் பிரதிநிதி ஒருவன் அனுப்பப்பட்டான். இவனை 'சோழஇலங்கேஸ்வரன்' என ஈழக் கல்வெட்டுக்கள் அழைக்கின்றன. பொலநறுவைக்குச் சோழர் சூட்டிய பெயர் ஜனநாத மங்கலமாகும். இது ராஜராஜனின் பட்டப் பெயர்களிலொன்றாக விளங்கிய 'ஜனநாத' என்பதை நினைவூட்டுகின்றது. புலஸ்தி நகரம் என்பதும் இதன் இன்னொரு பெயராகும். இந்துமத முனியின் இத்தகைய பெயரொன்றே இந்துமதம் இங்கு பெற்ற செல்வாக்கினை எடுத்தியம்புகின்றது. பொலநறுவையில் காணப்படும் மகாபராக்கிரமபாகுவின் சிலை என வருணிக்கப்படும் சிலைகூட அகத்தியரதே எனவும் இனங்காணப்பட்டுள்ளது. (Rutnam, James, T. 1979) சோழராட்சி பற்றிச் சூளவம்சம் மிகச்சுருக்கமான தகவல்களைத் தருவதோடு ஒருதலைப்பட்சமான தகவல்களையும் தந்துள்ளது என்பதனை ஈழத்திலும் தமிழகத்திலும் கிடைத்துள்ள சோழரது கல்வெட்டுக்களும் பிற தொல்லியற் சான்றுகளும் எடுத்தியம்புகின்றன. இவர்களது ஆட்சிபற்றிப் பிரஸ்தாபிக்கையில் சூளவம்சம்,

> ''முழு ஈழத்திலும் பௌத்த சங்கத்தின் முப்பிரிவுகளுக்கும் சொந்தமான புனிதச் சின்ன அறைகளை இவர்கள் உடைத்துச் சூறையாடி பொன் விக்கிரகங்கள் போன்ற பெறுமதிமிக்க புனிதப் பொருட்களை எடுத்துச் சென்றனர். இங்குமங்கும் அவர்கள் பௌத்த தேவாலயங்களைத் தரைமட்டமாக்கியதோடு இரத்தத்தை உறிஞ்சும் யக்ஷர்கள் போல் ஈழத்தின் பொக்கிஷங்கள் யாவற்றையும் சூறையாடி அபகரித்துச் சென்றனர்'' (C. V. L. V. : 20 – 22) எனக் கூறுகின்றது.

அதிஷ்டவசமாகத் தமிழகத்திலும் ஈழத்திலும் கிடைத்துள்ள சோழரின் கல்வெட்டுக்கள் சோழராட்சியின் பல்வேறு அம்சங்கள்பற்றிச் சூளவம்சத்தைவிடப் பல்வகைகளிலும் விரிவான வேறுபாடான தகவல்களைத் தருகின்றன. நம்நாட்டில் முதலாம் ராஜராஜன், முதலாம் ராஜேந்திரன், இரண்டாம் ராஜேந்திரன், அதிராஜேந்திரன் ஆகியோரது கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. இவை முறையே யாழ்ப்பாணக்கோட்டை, ஊர்காவற்

றுறை, மாதோட்டம், பதவியா, பொலநறுவை, மெடிறிகிரியா, மானுங்கேணி, நிலாவெளி, திரிகோணமலை ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன.

யாழ் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் யாழ்ப்பாணக் கோட்டையில் கிடைத்துள்ள முதலாவது ராஜேந்திரனது கல்வெட்டு முக்கியம் வாய்ந்தது. (Indrapala, K. 1971:52–58) இக்கல்வெட்டுப் பூரணமான நிலையில் கிடைக்கப் பெருவிட்டாலும்கூட இக்கல்வெட்டில் தானத்தை அளித்தவராக சாத்தன் காணப்படுகிருன். நல்லூரிலமைந்த இந்துக் கோயிலுக்கு இவன் அளித்த மிருகங்கள் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன. இம்மிருகங்களுக்கு அடைமொழியாகச் 'சாவாமூவா' என்ற சொல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளது. பொதுவாகத் தென்னிந்திய ஈழக் கல்வெட்டுக்களில் இவ்வடைமொழி கோயில்களுக்குக் கொடுக்கப்பட்ட ஆடு, மாடு, எருமை போன்ற மிருகங்களுக்கு உபயோகிக்கப்பட்டுள்ளதை நோக்கும்போது இச்சந்தர்ப்பத்திலும் இம்மிருகங்களே இக்கோயிலுக்கு அளிக்கப்பட்டன என்று கொள்ளலாம். இம்மிருகங்களில் இனவிருத்தியில் தொடர்ந்து இருப்பதற்காகப் பல்வகைப் பருவநிலையில் இவை அளிக்கப்பட்டதையும் 'சாவாமூவா' என்ற அடைமொழி எடுத்துக்காட்டுகின்றது. அத்துடன் இவற்றிடமிருந்து பெறப்பட்ட நெய்யே கோயில்களில் விளக்கெரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. எவ்வாருயினும் இக்கல்வெட்டில் நல்லூர் எனவரும் குறிப்பும், இக்கல்வெட்டுக் கிடைத்த இடமாகிய கோட்டையும் பல வரலாற்று நிகழ்ச்சிகளை நம் மனக்கண்முன்னே நிறுத்துகின்றன எனலாம். போத்துக்கேயர் யாழ்ப்பாண அரசின் ராசதானியாக விளங்கிய நல்லூரிலுள்ள அரசமாளிகை, கோயில்கள் ஆகியனவற்றைச் சிதைத்த பின்னர் யாழ்ப்பாணக் கோட்டையைக் கட்டினர் என்பதைப் போத்துக்கேய வரலாற்று ஆசிரியர்கள் சுட்டிக்காட்டியதை நோக்கும்போது யாழ்ப்பாண அரசு நல்லூரில் இராசதானி அமைக்க முன்பே நல்லூரில் ஒரு இந்து ஆலயம் இருந்தது என்பதும் இவ்வாலயம் சோழர் பாணியிலமைந்திருந்தது என்பதும் ஒரு வரலாற்று நிகழ்ச்சியாகவே காணப்படுகின்றது. துர்அதிஷ்டவசமாக இது பற்றிய விபரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை.

நல்லூரைப் போன்று மேலும் பல இடங்களிலும் இந்துக் கோயில்களைச் சோழர் அமைத்திருக்கலாம் என ஊகிக்கவும் இடமுண்டு. பொதுவாக ஈழத்தில் நிலைத்திருந்த சோழர் கடற்படை திரிகோணமலையில் மட்டுமே தரித்திருந்தது என்ற கருத்து நிலவுகிறது. நல்லூர்ச் சான்றை நோக்கும்போதும் வடபகுதியிலும் சோழராதிக்கம் நிச்சயமாக நிலைத்திருந்தது புலனுகின்றது. முதலாவது பராக்கிரமபாகுவினது நயினதீவுக் கல்வெட்டில் ஊர்காவற்றுறையில் நடைபெற்ற வர்த்தகம்பற்றிய குறிப்பு வருவதும், இம்மன்னனது கடற்படை சோழருக்கெதிராக ஊர்காவற்றுறை, மட்டுவில், வலிகாமம் போன்ற இடங்களில் நிலைகொண்டிருந்தது பற்றியும், சமகால தமிழகச் சோழக் கல்வெட்டுக்கள் எடுத்துரைப்பதை நோக்கும்போதும் பாக்குநீரிணையைத் தமது கடலேரியாக ஆக்க விரும்பிய சோழர் அதுவும் மாதோட்டம், திரிகோணமலை ஆகிய துறைமுகப் பிராந்தியங்களில் செல்வாக்குப் பெற்ற இவர்கள் நிச்சயமாக வடபகுதித் துறைமுகங்களிலும் தமது கடல் ஆதிக்கத்தை நிலைநாட்டியிருக்கலாம். இதனுல் காங்கேசன்துறை, ஊர்காவற்றுறை போன்ற துறைமுகங்கள் மட்டுமன்றிக்

கிழக்குக் கரையிலும் இவர்களது செல்வாக்கு நிலைத்திருக்கலாம். ஆனால் இவைபற்றி விரிவான சான்றுகள் எமக்குக் கிடைக்கவில்லை. விரிவான சான்றுகள் கிடைக்காவிட்டாலும்கூட இங்கு கிடைத்துள்ள நாணயங்கள், சோழரை நினைவூட்டும். செம்பியன்பற்று, நல்லூர், மாவிட்டபுரத்திலுள்ள 'வளவர்கோன்பள்ளம்', நவிண்டிலிலுள்ள 'கங்கைகொண்டான்' போன்ற இடப்பெயர்கள் சோழர் இங்கு விட்டுச்சென்ற எச்சங்களாகத் திகழ்கின்றன. கி. பி. 12ஆம் நூற்றாண்டில் சோழ மன்னனாகிய முதலாவது குலோத்துங்கனது சேனாதிபதியாகிய கருணாகரத் தொண்டமான் ஈழத்தை வென்றதுபற்றிக் கலிங்கத்துப் பரணியில் வரும் குறிப்பும், கரணவாய், வெள்ளப்பரவை ஆகிய இடங்களிலமைந்த உப்பளங்களிலிருந்து உப்பை ஏற்றிச் செல்வதற்காக இவனால் வெட்டப்பட்ட ஆறே தொண்டமான் ஆறு என்ற செய்தியும், இவனுடன் இணுவிலிலுள்ள கருணாகரப்பிள்ளையார் இணைத்துக் கூறப்படுவதும் இச்சந்தர்ப்பத்தில் விரிவாக ஆராயப்பட வேண்டிய செய்திகளாக அமைகின்றன.

வன்னியர்பற்றிய குறிப்பு தமிழகத்தின் சோழக் கல்வெட்டுக்களில் கி.பி. 11ஆம் நூற்றாண்டிலேதான் காணப்படுவதோடு, இராணுவக் கடமையிலீடுபட்ட இவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்களே வன்னிமைகள் என அழைக்கப்பட்டதை நோக்கும்போதும் சோழராட்சியில் இவர்கள் ஈழத்தின் வடமேற்கு, வடமத்திய, வட, கிழக்குப் பகுதிகளில் வந்து குடியேறியிருக்கலாமெனக் கொள்ளலாம். (Indrapala, K. 1970) வன்னி நாட்டில் சிறந்து விளங்கும் ஆலயங்களான உருத்திரபுரம் சிவன் கோயில், வவுனிக்குளச் சிவன் கோயில், ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரர் போன்ற தலங்கள் இக்காலத்திலே சிறப்படைந்திருக்கலாம். இவ்வாறேதான் வற்றாப்பளையிலுள்ள அம்மன் ஆலயமும் முக்கியம் பெற்றிருக்கலாம் அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கொக்குளாய்க் குடாவின் மேற்குப் பக்கமாக உள்ள கந்தசுவாமிமலை, குருந்தனூர் ஆகிய இடங்களிலுள்ள பொலநறுவைராச்சிய காலத்தைச் சேர்ந்த கோயில்கள்கூட சோழர் காலத்தில் தோன்றியிருக்கலாம்.

எவ்வாறாயினும் சோழர் காலத்திலமைக்கப்பட்ட ஐயந்திரிபற்ற சான்றுகள் அடிப்படையில் அமைந்த கோயில்களாக மாதோட்டத்திலுள்ள 'ராஜராஜேஸ்வரம்', 'திருவிராமேஸ்வரம்' ஆகியவை விளங்குகின்றன. மாதோட்டத்தில் அமைந்திருந்த திருக்கேதீஸ்வரத்தைப்பற்றி அப்பரும் சுந்தரரும் பாடியுள்ளனர். இவர்கள் பல்லவர் காலத்தைச் சேர்ந்தவர்கள். சோழர்கள் இவர்கள் பாடிய திருக்கோயிலைத்தான் புனருத்தாரணம் செய்தார்களா அல்லது புதிய கோயில்களைக் கட்டினார்களா என்பது தெரியவில்லை. என்றாலும் ஊர்காவற்றுறைக் கோட்டையில் கண்டுபிடிக்கப்பட்ட சோழர் கட்டுவித்த கோயிலின் கல்லாலான கதவு நிலையில் எழுதப்பட்ட கல்வெட்டொன்றில் மாதோட்டத்தில் சோழத் தளபதியாகிய ஜெயங்கொண்ட மூவேந்தவேளாளர் குறிக்கப்படுவதால், இவர் இங்குள்ள கோயிலொன்றுக்குத் தானம் வழங்கினார் எனக் கொள்ளலாம். இத்தகைய சான்று சோழர் இப்பகுதியில் கட்டுவித்த கோயில்கள் அழிந்தாலும் அவற்றின் எச்சமாக இருப்பது நோக்கற்பாலது. (Indrapala, K. 1971 : 10).

தாழிக்குமரனால் அமைக்கப்பட்ட இராஜராஜேஸ்வரம் கல்வெட்டில், 'ராஜராஜஸ்வரத்து மஹாதேவன் கோயில்' என அழைக்கப்படுகிறது. இக்கோயிலுக்குச் சோழ நிர்வாகத்தில் பங்குகொண்ட இத்தாழிக்குமரன் தானமாகக் கொடுக்கப்பட்ட நிலங்களை நோக்கும்போது இவ்வதிகாரிகள் இவ்வாறு அரசாங்க நிலங்களைக் கோயில்களுக்கும் தானமாகக் கொடுக்கவும், அவற்றை ஆதரிக்கவும் அனுமதிக்கப்பட்டனர் என்பது புலனாகின்றது. (Pathmanathan, S. 1976 : 59 - 70) இவன் கொடுத்த நிலம் ராஜராஜத் தெருவுக்குக் கிழக்கேயும் கம்மாளர் இருக்கைக்குத் தெற்கேயும் அமைந்திருந்தது. நிலங்கள் மட்டுமன்றி ஏனைய அரசாங்க வருமானங்களும் இக்கோயிலுக்கு அளிக்கப் பட்டமையும் இவற்றின்மூலம் வைகாசி விசாகத்தில் விழா எடுக்கப்படல் வேண்டுமென்ற இவனது விருப்பமும் பின்வரும் அடிகளால் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

அஃதாவது,

''...... இவ்வூரில் நெய்யும் தறிகளால் கூடின முதலும் வட்டத்தால் கூடின முதலும் பாதை படவுகளால் கூடின முதலுங்கொண்டு திருநிருத்தியாமம் வைய்யாசி விசாகம் ஏழுநாளும் விழா எடுத்துத் தீர்த்தம் ஆட்டுவிப்பதாகவும் இது மட்டுமன்றி இங்குள்ள ஆண்டவனுக்கு நைவேத்நியம் வைப்பதற்கு ஒருபொழுதுக்கு இருநாழியாக எல்லாமாகத் தினம் ஆறு நாழி அரிசியும், இங்கு தரிசிக்கும் அந்தணர்களுக்குத் தினம் எட்டு நாழி அரிசியும் கொடுப்பதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டதோடு இங்குள்ள மடத்திலும் அன்னதானத்திற்கு வேண்டிய ஒழுங்குகளும் செய்யப்பட்டிருந்தன. (Velup pillai, A. 1972 : 42 – 55)

அடுத்து வருவதுதான் 'திருவிராமேஸ்வரமுடையான் மகாதேவன் கோயில்' என அழைக்கப்படும் திருவிராமேஸ்வரமாகும். இங்கு கிடைத்துள்ள முதலாவது ராஜேந்திரன் காலக் கல்வெட்டொன்று இக்கோயிலில் சந்தி விளக்கு — அஃதாவது மாலைநேர விளக்கெரிப்பதற்கு மேற்கொள்ளப் பட்ட ஒழுங்குகள்பற்றிக் கூறுகின்றது. இவ்விளக்கை எரிப்பதற்கு அரசனது பெருந்தானத்தைச் சேர்ந்த பணிமகன் ஒருவன் நான்கு பொற்காசுகளை முதலிட்டான். இந்நான்கில் இரண்டு பொற்காசுகள் இங்கு வாணிப முயற்சிகளிலீடுபட்டிருந்த சக்கரப்பாடியாரிடமும், தலா ஒவ்வொரு காசும் வெற்றிலை வணிகர், வாழைக்காய் வணிகரிடமும் ஒப்படைக்கப் பட்டிருந்தது. இந்நான்கு பொற்காசுகளிடமிருந்து பெறப்பட்ட வருமானத்திலே இவ்விளக்கு எரிக்கப்பட்டது. எனவே மாதோட்டக் கோயில் அமைப்புப்பற்றி நாம் விரிவாக அறிந்துகொள்ள முடியாவிட்டாலும் கூட இக்கோயில்களில் நிலவிய அன்றாட ஒழுங்குகள்பற்றியும் இவற்றைக் கவனிப்பதில் அரச ஊழியர் கொண்டிருந்த பங்கு பற்றியும் அறியமுடிகிறது. சோழரால் மாதோட்டம் 'ராஜராஜபுரம்' எனப் பெயரிடப்பட்டதும் ஈண்டு நினைவுகூரற்பாலது.

அநுராதபுரத்தில்கூட முதலாவது ராஜராஜன் காலத்தில் இந்துக் கோயிலும் பிராமணக் குடியிருப்பொன்றும் இயங்கியது என்பதற்கு மறைமுகமாகச் சில சான்றுகள் கிடைத்துள்ளன. இத்தகைய சான்றாக அமைவதுதான் மிகுந்தலையிலிருந்து மூன்று மைலுக்கு அப்பாலுள்ள மகா

கிருண்டிகமவில் கிடைத்துள்ள இரண்டாவது கஜபாகு காலக் கல்வெட்டாகும். இக்கல்வெட்டில் இவன் காலத்தில் நிலவிய பிராமணக் குடியிருப்பு 'ஜயங்கொண்ட சாளமேக சதுர்வேதி மங்கலம்' என அழைக்கப்பட்டதும் தெரிகிறது. (Indrapala, K. 1971: 6–9) இவர்களுக்கு மானியமாகக் கிடைத்த காணி ஒன்றை ஏதோ ஒரு காரணத்தால் இவர்கள் இழக்க இக்காணிக்கு உரிமையாளராக வல்லபர் என்பவன் காணப்பட, இவனிடமிருந்து இதனைப் பெற்றுத் திரும்பவும் இப்பிராமணக் குடியேற்றத்துக்கு அளிக்கப்பட்டதை இக்கல்வெட்டுக் கூறுகிறது. இருந்தும் இக்கல்வெட்டின் முக்கியத்துவம் யாதெனில், இதில் வரும் 'சாளமேக', 'ஜயங்கொண்ட' ஆகிய பெயர்களே. சாளமேக இரண்டாவது கஜபாகுவின் முன்னோனான ஜெயபாகுவின் பட்டப் பெயர்களில் ஒன்றாகும். ஆனால் 'ஜெயங்கொண்ட' முதலாவது ராஜராஜனின் பட்டப் பெயராகும். எனவே இப்பிராமணக் குடியேற்றத்தை முதலாவது ராஜராஜன் 'ஜயங்கொண்ட சதுர்வேதி மங்கலம்' என்ற பெயருடன் அமைக்க இது கஜபாகு காலம்வரை தொடர்ந்திருக்க இந்துவாக விளங்கிய கஜபாகு பட்டாபிஷேகம் பெறுததனால் முன்னோனான ஜெயபாகுவின் பட்டப் பெயரான 'சாளமேக' என்பதனையும் சேர்த்து 'ஜயங்கொண்ட சாளமேக சதுர்வேதி மங்கலம்' என இதற்குப் பெயரிட்டான் எனக் கொள்ளுவது பொருத்தமாகும். அத்துடன் ராஜராஜனால் அமைக்கப்பட்ட இப்பிராமணக் குடியேற்றத்துடன் இந்துக் கோயில் ஒன்றும் இவன் காலத்தில் நிச்சயமாக அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஏனெனில் பிராமணர்கள் பொதுவாகவே கோயிலை அண்டியே வாழ்ந்தனர். ராஜராஜன் கந்தளாயில் ராஜராஜேஸ்வரம் அமைத்து 'ராஜராஜ சதுர்வேதி மங்கலம்' என்ற பிராமணக் குடியேற்றத்தை ஏற்படுத்தியதை உற்றுநோக்கும்போது இங்கும் 'ஜயங்கொண்டேஸ்வரம்' என்ற ஒரு கோயிலையும் அமைத்து அதனைச் சேவிக்க ஜயங்கொண்ட சதுர்வேதி மங்கலம்' என்றொரு பிராமணக் குடியேற்றத்தையும் ஏற்படுத்தியிருந்தான் எனக்கொள்ளல் ஏற்புடைத்தான கருத்தாக அமைகின்றது.

சோழரது சமய நடவடிக்கைகள் விதந்து காணப்படும் இடமாகப் பொலநறுவை அமைகின்றது. நாட்டின் ஏனைய பாகங்களில் அவர்கள் அமைத்த கோயில்கள் அழிய, அவைபற்றிய சான்றுகளைக் கல்வெட்டுக்களின் மூலமாகவே அறியவேண்டிய நிலை காணப்படுகின்றது. பொலநறுவையில் இவர்கள் அமைத்த கோயில்கள் சில அழியாது இன்றும் அவர்கள் சமய நடவடிக்கைகளைப் பறைசாற்றி நிற்பதோடு காலத்தால் மிகப்பழைய, அழியாத கோயில்களாகவும் விளங்குகின்றன. அத்துடன் இவற்றுள் காணப்படும் கல்வெட்டுச் சான்றுகள் இக்கோயில்களது நிர்வாகம்பற்றியும் விரிவாகப் பேசுகின்றன. பொலநறுவையில் மாத்திரம் பத்துச் சிவன் கோயில்களும், ஐந்து விஷ்ணு கோயில்களும், காளி கோயில் ஒன்றும் உள்ளன. (இந்திரபாலா, கா. 1970: 13) இவற்றுள் சிவன் கோயில்களில் 2ஆம், 5ஆம், 6ஆம் சிவன் கோயில்கள் கட்டிடப் பாணியமைப்பைப் பொறுத்துச் சோழர் காலத்தவை என இனங்காணப்பட்டுள்ளன. இவற்றுள் காலத்தால் முந்தியது இரண்டாவது சிவதேவாலயமாகும். இங்கே கிடைத்துள்ள கல்வெட்டுச் சான்றின்மூலமாக இஃது முதலாவது ராஜராஜனின் பட்டமகிஷியாகிய வானவன் மாதேவியின் பெயரால் 'வானவன் மாதேவியீஸ்வரம்' என அழைக்கப்பட்டது புலனு

கின்றது. (Bell, H. C. P. 1906: 17 – 21). இக்கோயில் கர்ப்பகிருகம் (20அடி 6அங். சதுரம்), அந்தராளம் (15அடி × 6அடி × 10அடி), அர்த்த மண்டபம் (15அடி 6அங். × 10அடி)), மண்டபம் (30அடி × 23அடி) என்ற அங்கங்களை உடையதாக அமைந்துள்ளது. இக்கோயில்பற்றிக் கூறவந்த பரணவித்தான அவர்கள் 'திருப்திகரமான முறையில் பாதுகாக்கப்பட்டுள்ள இக்கோயில் ஒன்றுதான் முழுக்கமுழுக்கக் கருங்கல்லினுல் கட்டப்பட்ட கட்டிடமெனக் கூறி, பொலநறுவையில் இன்று காணப்படும் கட்டிடங்களில் காலத்தால் பழையது மட்டுமன்றி ஈழத்திலுள்ள திராவிடக் கட்டிடக் கலையின் சிறப்புக்குச் சிறந்த உரைகல்லாகவும் இது அமைந்துள்ளதெனக் கூறியுள்ளார். (Paranavitane, S. 1973 : 79) இக்கோயிலே அண்டி மூன்று சிறுகோயில்களும் காணப்படுகின்றன. இவற்றுள் இரண்டு கணேச, முருகன் கோயில்கள் என இனங்காணப்பட்டுள்ளன. (Bell, H. C. P. 1906 : 21) இவற்றைவிட இக்கோயிலுடன் இரு சிறிய விஷ்ணு கோயில்களும் உள. இவை முறையே 'பள்ளிகொண்டான்', 'அழகிய மணவாளர்' என அழைக்கப்பட்டமையும் கல்வெட்டுகளின்மூலம் தெரியவருகிறது. (Bell, H. C. P. 1906 : 22)

ஐந்தாவது சிவதேவாலயம் ஒரு பள்ளிப்படைக் கோயிலாகக் காணப்படுகின்றது. மன்னர்கள் அல்லது சமயப் பெரியார்கள் இறந்தபின் அவர்களை அடக்கஞ் செய்து அவ்விடத்திலே எழுப்பப்பட்ட கோயில்களே பள்ளிப்படைக் கோயில்களாகும். இவ்வாறு பள்ளிப்படைக் கோயில்களை அமைக்கும் வழக்கம் பாண்டிய, சோழ வம்சங்களிடையே காணப்பட்டது. (சிறீனிவாசன். 1968 : 3–9) ஈழத்திலும் இவ்வழக்கம் நிலவியதை இக்கோயிலின் மகாமண்டபத்தில் எட்டுப் பானைகளில் நிரப்பிக் காணப்பட்ட எலும்புகள் எடுத்தியம்புகின்றன. இக்கோயிலின் அம்சங்களாகக் கர்ப்பகிருகம் (21 அடி சதுரம்), அந்தராளம் (7 அடி × 9 அடி), அர்த்தமண்டபம் (9 அடி 3அங். × 8 அடி 9அங்.) ஆகியவற்றினை விட மூன்று மண்டபங்களும் (25 அடி × 23 அடி; 24அடி × 23அடி;75 அடி 6 அங். × 33 அடி 9 அங்.) காணப்படுகின்றன. இறுதியாக உள்ள பெரிய மண்டபத்தில் நாற்பது தூண்களுமிருந்தன. (Bell, H. C. P. 1906 : 5) இக்கோயிற் பிரகாரத்தில் ஐந்து சிறிய கோயில்களும் உள. இவற்றுள் இரண்டை அவற்றுள் கண்டெடுக்கப்பட்ட சிலைகளைக் கொண்டு பெல் அவர்கள் கணேசர், சப்தமாத்திரிகர் கோயில்கள் என இனங்கண்டுள்ளார். ஆருவது சிவதேவாலயம் பொதுவாக ஐந்தாவது சிவதேவாலயத்தை ஒத்துக்காணப்பட்டாலும் கூட இங்கே கர்ப்பகிருகம் (8அடி சதுரம்), அந்தராளம் (4அடி 8அங். × 7அடி 6அங்), அர்த்தமண்டபம் (9அடி 2அங். × 7அடி 6அங்.) ஆகியவற்ருேடு முகமண்டபமாக (20அடி 6அங். × 14அடி 9அங்.) ஒன்றே காணப்படுகிறது.

இக்கோயில்களைவிட இவற்றுக்கு அருகே மண்ணிலே புதைத்து வைத்து அகழ்வாய்வின்மூலமாகக் கண்டுபிடிக்கப்பட்ட வெண்கலச் சிற்பங்களை ஈழத்தில் சோழர் காலத்தின் கலைவளர்ச்சிக்குச் சிறந்த சான்றுகளாக அமைகின்றன. முன் எப்போதுமில்லாத அளவில் எண்ணிக்கையிலும், வகையிலும், தரத்திலும் சிறந்து காணப்படும் இவை தமிழகத்தில் சோழரின் சிற்பக்கலைக்கு எவ்வாறு அங்கு கிடைத்துள்ள வெண்கலச் சிலைகள் சிறந்த உரைகல்லாக விளங்குகின்றனவோ அவ்வாறே ஈழத்துச் சிலைகளும்

இங்கு இக்கலை அவர்கள் காலத்தில் மேன்மை பெற்றிருந்ததை விளக்குகின்றன. வெறும் கலை அம்சத்தில் மட்டும் இவை முக்கியத்துவம் பெறுகின்றன என்றும் கூறிவிட முடியாது. அக்கால சமய வளர்ச்சியின் பல்வகை அம்சங்களையும் இவை சித்தரிப்பனவாகவும் உள. வெண்கலச் சிலைகளில் சிவன், பார்வதி, முருகன், கணேசன், விஷ்ணு, பிரமா, சூரியன், நந்தி, நாயன்மார், காரைக்காலம்மையார், சிவலிங்கம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இவற்றுள் சிவன் பல்வகை மூர்த்தங்களில் காணப்படுகிறான். நடராஜ மூர்த்தம் சிறப்பாக அமைந்துள்ளது. இதைவிட சோமாஸ்கந்த மூர்த்தம், படுகவைரவ மூர்த்தம், சுகாசன மூர்த்தம் ஆகிய நிலைகளிலும் சிவன் சிலைகள் உள. விஷ்ணுகூட போகஸ்தான மூர்த்தத்தில் காணப்படுகிறார். அம்மன் விக்கிரகங்களில் பார்வதி மூர்த்தத்தைவிட, சரஸ்வதி, லட்சுமி ஆகியோரது சிலைகளும் உள. நாயன்மார்களுடன் காரைக்கால் அம்மையார் பேயுருவாகி இறைவன் புகழ்பாடும் நிலையிலுள்ள சிலை மிக மிகத் தத்ரூபமாக அமைந்துள்ளது. மாம்பழத்தைக் கையில் வைத்திருக்கும் கணேசர் சிலை முக்கியமானது. பொதுவாக மோதகமே கணேசருடைய சிலைகளில் காணப்படுவது வழக்கம். இம்மாம்பழம் சிவன் கணேசருக்கு மாம்பழம் ஈந்த கதையைப் பிரதிபலிப்பதாக அமைகின்றது. இவ்வெண்கலச் சிலைகளைவிட கற்சிற்பங்களும் சிறப்பாக இக்காலத்துச் சோழர் பாணியில் கிடைத்துள்ளன. இவற்றுள் சூரியன், அக்கினி, பிரமா, சிவலிங்கம், சப்தமாத்திரிகர்கள், மஹாகாளி, மஹிஷாசுரமர்த்தினி, விஷ்ணு, பார்வதி, கணேசர், முருகன் ஆகியோரது கற்சிலைகள் சிறப்பு வாய்ந்தவை. பொதுவாக இங்கு கிடைத்துள்ள வெண்கலச் சிலைகள் நம் நாட்டில் உருவாக்கப்பட்டனவா அன்றி இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டனவா என்ற விடயத்தில் அறிஞர் மத்தியில் ஒருமித்த கருத்து நிலவவில்லை. இற்றைக்கு முக்கால் நூற்றாண்டுகட்கு முன்னதாக இவைபற்றி ஆராய்ந்த பெல் என்ற அகழ்வாராய்ச்சியாளர் இவை இந்தியாவில் இருந்தே இறக்குமதி செய்யப்பட்டன எனக் கருதினார். (Bell, H. C. P. 1908 : 17 - 18) ஆனால் பரணவித்தானாவோ எனில் சோழராட்சியால் சிங்கள அரசவம்சமும் பிரபுத்துவ வர்க்கமும் அழிந்ததால் சிங்களக் கலைஞர்கள் போஷிப்பாரற்ற நிலையில் காணப்பட்டனர் எனக் கூறி இதற்குச் சான்றாகச் சோழராட்சியில் எவ்வித பௌத்த கட்டிடங்களுமே கட்டப்பட்டவில்லை எனவும் காட்டி, இதனால் இச்சிலைகளை உள்ளூர் கலைஞர்கள் வடித்தெடுத்திருக்க முடியாது எனக் காட்டி, இந்தியாவிலிருந்தே இவை கொண்டுவரப்பட்டன எனக் கூறியுள்ளார். (Paranavitane, S. 1973 : 79) ஆனால் கொடகம்புரே என்ற இன்னொரு அறிஞர் இச்சிலைகளை ஈழத்திலுள்ள உள்ளூர்க் கலைஞர்களே வடித்தனர் என அபிப்பிராயப்படுகிறார். (Godakumbura, G. C. 1961) இச்சந்தர்ப்பத்தில் இவ்வெண்கலச் சிலைகள் பற்றி கலாவிற்பன்னராகிய சிவராமமூர்த்தி அவர்களது கருத்து மனதிற் கொள்ளற்பாலது. அவர் 'ஈழத்துச் சோழர் காலச் செப்புத் திருமேனிகளில் சோழர் காலக் கலையின் செல்வாக்கு இருந்தாலும் கூட இவற்றுள் உள்ளூர்க் கலைஞர்களது முத்திரை நன்கு பதிந்து காணப்படுகிறது' எனக் கூறி இத்தகைய தனித்துவத்திற்கு ஈழத்துக் கலைஞர்களது பங்களிப்பே காரணமெனவும் அபிப்பிராயப்படுகிறார். இறுதியாக இவர் 'அகழ்வாராய்ச்சியின்மூலமோ கண்டுபிடிப்புக்களின்மூலமோ கிடைக்கப்பெற்ற சிலைகளின் தொகையைவிடச் சிறப்புத் தன்மையில் நடராஜ வடிவ அமைப்பில் ஈழத்தின் பங்களிப்பு

மேலோங்கி நிற்கின்றது' எனக் கூறியுள்ளார். (Sivaramamurti, C. 1974: 372–373) அறிஞர்கள் எவ்வாறு அபிப்பிராயப்பட்டாலுங்கூட ஒன்று மட்டும் தெளிவு. அஃதாவது தென் ஆசியக் கலை மதச் சார்புடையது. இதற்கு இந்து மதம் விதிவிலக்கானதல்ல. இந்து மதக் கலைஞர்கள் சிற்ப சாஸ்திரத் தேர்ச்சியும், மத நடைமுறைகள்பற்றிய பாண்டித்தியமும் உடையவர்கள். இதனால் ஆரம்பத்தில் சோழக் கலைஞர்கள் ஈழத்தின் பிரதான பட்டினங்களில் கலைகளை வளர்க்க, இவர்களுடன் உள்ளூர்க் கலைஞர்களும் சேர்ந்து செயல்பட்டனர். இதனுற்றான் இச்சிலைகளில் சோழ அம்சங்களும் உள்ளூர்த் தனித்தன்மையும் காணப்படுகிறது. நிச்சயமாகச் சோழர் வருகைக்கு முன்னரே உள்ளூரில் வெண்கலச் சிலைகளை வடிக்கும் ஆற்றல் படைத்த கலைஞர்கள் இருந்தனர். இவர்கள் கலையில் சோழச் செல்வாக்கு இருந்தாலுங்கூட உள்ளூர் முத்திரையும் காணப்பட்டது எனலாம். சோழரின் திராவிடக் கலையின் செல்வாக்கு பொலநறுவையைக் கட்டிடக் கலையில் மிகவும் ஆழமானதாகப் பதிந்தும் உளது. இதுபற்றிப் பிறிதோரிடத்தில் நோக்குவோம்.

பொலநறுவையிலுள்ள வானவன் மாதேவீஸ்வரத்தில் கிடைத்துள்ள கல்வெட்டின்மூலம் சோழர் காலக் கோயில்களில் அன்றாட கடமைகளிலும், நிர்வாகத்திலும் ஈடுபட்டிருந்தோர்பற்றிய விபரம் காணப்படுகிறது. இக் கல்வெட்டுக்கு உரியவனுகச் சோழ அரச நிர்வாகத்தில் உயர்பதவி வகித்த பல்லவராயன் காணப்படுகிறான். இவன் இக்கோயிலுக்கு அளித்த விளக்கொன்றுபற்றியும், இவ்விளக்கை நித்தியம் எரிப்பதற்கு ஐந்து பொற்காசை வைப்பீடு செய்ததையும் இது கூறுகிறது. இத்தகைய கைங்கரியத்தைத் தவறாது கண்காணிப்பவர்களாகப் பதினாறு மூலப்பாடுடை பஞ்சாச்சாரியர், தேவகர்மிகள், கிரமவித்தன், சிவபிராமணர், பன்மகேஸ்வரர், பரிசாரகர், தேவரடியார் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். (குணசிங்கம், செ. 1978/79) இத்தகையோர் தமிழகத்திலும் கோயில் நடவடிக்கைகளில் முக்கிய பங்குகொண்டிருந்ததால் ஈழத்திலும் சோழர் காலத்தில் அந்நடைமுறைகளே வழக்கிலிருந்தன என்பதை இது எடுத்துக்காட்டுகின்றது எனலாம்.

கல்வெட்டுச் சான்றுகள் பொலநறுவை மாவட்டத்திலுள்ள அத்தகட, மெடிறிகிரியா ஆகிய இடங்களில் சோழர் காலக் கோயில்கள் இருந்ததைக் கூறினுலுங்கூட இவற்றின் அழிபாடுகள் நமக்குக் கிட்டவில்லை. அத்தகடவில் கிடைத்த கல்வெட்டு இங்கே முதலாவது ராஜராஜனுல் அமைக்கப்பட்ட 'உத்தம சோழஸ்வரம்' பற்றிக் குறிப்பிடுகிறது. (Veluppillai, A. 1972 : 20 – 23) உத்தமசோழன் ராஜராஜனுக்கு முன்னர் சோழ அரசனுக விளங்கியவன். இக்கல்வெட்டில் இக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட பல்வகைத் தானங்கள்பற்றிய குறிப்பு வருகிறது. இவற்றுள் மூன்று வேலி நிலம், நந்தாவிளக்கெரிப்பதற்கு இருபது பசுக்கள், ஐந்து 'சந்தி விளக்கு' எரிப்பதற்குக் கொடுக்கப்பட்ட 50 தென்னை மரங்கள் பற்றிய விபரம் காணப்படுகின்றது. பசு நெய்யும், தென்னையிலிருந்து பெறப்படும் எண்ணெயும் அக்காலத்தில் விளக்கெரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டன. நந்தாவிளக்கு பொதுவாகவே நிரந்தரமாக எரியும் விளக்காகும். சந்திவிளக்குக் கோயில்களில் பொதுவாக மாலை நேரங்களில் எரிக்கும் விளக்காகும். சிலசமயம் இவ்விளக்கு அதிகாலையிலும் எரிக்கப்படும். மெடிறிகிரியாவில் கிடைத்துள்ள கல்வெட்டு இரண்டாவது ராஜேந்திரன் (கி.பி. 1052 – 64) காலத்ததாகும்

(Indrapala, K. 1971 : 25–27) இக்கல்வெட்டில் மெடிறிகிரியா மண்டலகிரி என்றும், நித்தியவிநோதபுரம் எனவும் குறிக்கப்பட்டுள்ளது. ராஜராஜனின் பட்டப் பெயர்களில் ஒன்றுதான் நித்தியவிநோதன் என்பதாகும். இதனுல் இவன் பெயரால் இவ்விடம் இப்பெயரைப் பெற்றது எனலாம். அத்துடன் இங்குள்ள சிவதேவாலயம் 'பண்டித சோழஸ்வரம்' எனவும் அழைக்கப் படுகிறது. இங்கே 'பண்டித சோழன்' என்ற பட்டப் பெயரை ராஜராஜனது மகனுகிய முதலாவது ராஜேந்திரன் சூடியிருந்ததை நோக்கும்போது இக்கோயிலுக்கு ராஜேந்திரனது பெயர் சூட்டப்பட்டதும் தெளிவாகின்றது. இவ்விடத்நில் சோழப் படைப் பிரிவாகிய இளைய மும்முடிச் சோழ அணுக்கர் இராணுவப் பிரிவைச் சேர்ந்த வளவன்பித்தன்சரவணன் என்பான் தனது மகனின் ஞாபகார்த்தமாக பண்டிதசோழஸ்வரத்திற்கு நந்தாவிளக் கொன்றும், 26 பசுக்களும் தானமாகக் கொடுத்ததை இக்கல்வெட்டு எடுத் தியம்புகின்றது.

சோழர் காலத்தில் முக்கியமான இடங்களில் பதவியாவும் குறிப்பிடத் தக்கது. சிலர் சோழர் பொலநறுவையை ராசதானியாக அமைக்குமுன்னர் பதவியாவிலேதான் தமது தலைநகரை அமைத்திருந்தனர் எனவும் கருது கின்றனர். (Indrapala, K. 1971 : 32) காரணம் யாதெனில் வடஈழத்தைக் கைப்பற்றிய முதலாவது ராஜராஜனின் கல்வெட்டுக்கள் இங்கே காணப் படுவதுதான். இவ்விடத்தில் எல்லாமாக ஆறு சிவன் கோயில்களும் ஒரு காளிகோயிலும் உள. (Veluppillai, A. 1972 : 23–31; Indrapala, K. 1971: 32–36) இக்கோயில்களின் அடித்தளங்கள் மட்டுமே காணப்படுகின்றன. கொடகம்புறே அவர்கள் இக்கோயில்களில் சில பௌத்த கோயில்களின் அடித்தளங்களிலிருந்து கட்டப்பட்டிருக்கலாம் அல்லது பௌத்த கோயில் களை இடித்துப் பெறப்பட்ட பொருட்களைக் கொண்டும் கட்டப்பட்டிருக்கலா மெனவும் கருதுகிருர்கள். (Godakumbura, G. E. 1962 : G. 67) இங்கு கிடைத்த கல்வெட்டுக்களில் சிவதேவாலயங்களில் கிடைத்தனவற்றில் முத லாவது சிவதேவாலயத்தில் கிடைத்த நான்கு கல்வெட்டுக்களும், மூன்ருவது சிவதேவாலயத்தில் கிடைத்த ஒரு கல்வெட்டும் குறிப்பிடத் தக்கவை. (Veluppillai, A. 1972 : 23–31)

பதவியாவிலுள்ள முதலாவது சிவதேவாலயம் ராஜராஜனின் பெய ரால் ''ரவிகுலமாணிக்கேஸ்வரம்'' என அழைக்கப்பட்டது. ரவிகுலமாணிக் கம் என்பது ராஜராஜனின் பட்டப் பெயர்களிலொன்ருகும். இங்கே கிடைத்துள்ள முதலாவது ராஜேந்திரனது காலக் கல்வெட்டில் இக்கோயி லுக்குத் தானம் வழங்குவோர்பற்றிய விபரம் வருகிறது. (Indrapala, K, 1971 : 32–36) இவர்களின் பட்டப் பெயர்களான உடையான், காந்தன், நாணுதேசிகள் போன்றவை குறிப்பிடப்படுவதை நோக்கும்போது இக் கோயிலைப் போஷிப்பதில் நிர்வாகிகளும், போர்வீரர்களும், வணிகர்களும் முக்கிய பங்கினை வகித்தது தெளிவாகின்றது. இக்கோயிலுக்கு அத்திவார மிட்டவர்களாக 'அழகன் வத்தமநான தேசிய்யாயத் துணைச் செட்டி', 'பதியில் வணிகன் தனியப்பன்' ஆகியோர் குறிக்கப்படுகின்றனர். இவர்கள் விளக்குகள், மணிகள், பொற்காசுகள், மிருகங்கள் ஆகியனவற்றைத் தான மாக அளித்துள்ளனர். பதவியாவிலே கிடைத்துள்ள திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர் சாசனமொன்று சிவன் கோயிலொன்றினைப் பரிபாலிப்பதற்

கும் அதற்குச் சேவை புரிவதற்கும் இவ்வணிகர் அமைத்திருந்த சுயாட்சி கொண்ட நகரமாகிய ஐயம்பொழில் பட்டினம் பொறுப்பாயிருந்ததை எடுத்தியம்புகிறது. பதவியாவிற் கிடைத்த மற்றொரு திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவரது கல்வெட்டில் "காளி கணம்" பற்றிய குறிப்பு வருகிறது. இத்தகைய குறிப்பு காளி அல்லது துர்க்கை வழிபாடுடையோராக இவர்கள் விளங்கியதை எடுத்துக்காட்டுகிறது. அத்துடன் இதே கல்வெட்டில் வரும் 'வடதழி' என்ற குறிப்பும் இவர்களால் நிருமாணிக்கப்பட்ட காளி கோயிலைக் குறிக்கலாம். காலத்தால் 12ஆம் 13ஆம் நூற்றூண்டை இக் கல்வெட்டுச் சேர்ந்தாலும்கூட பதவியாவில் சோழர் காலந்தொட்டு சிவ, காளி வழிபாடுகள் நிலைத்திருந்ததையும், இதற்கு வணிகர் கொடுத்த ஆதரவையும் இவை எடுத்துக்காட்டுகின்றன. (Veluppillai. 1971 : 46–57) இது மட்டுமன்றி பதவியாக் கல்வெட்டுக்களில் வரும் பெயர்கள்பற்றியும் இங்கு குறிப்பிடுதல் அவசியமாகின்றது. இப்பெயர்கள் முதலாவது சிவ தேவாலயத்தில் கண்டுபிடிக்கப்பட்ட நான்கு கல்வெட்டுக்களிலும் காணப் படுகின்றன. (Veluppillai, A. 1972: 23 - 28) இக்கல்வெட்டில் வரும் செட்டி. வணிகன் போன்ற பெயர்கள் இச்சிவன்கோயிலை அமைப்பதில் வர்த்தகர் கொண்டிருந்த பங்களிப்பை எடுத்துக்காட்டும் அதேநேரத்தில் இவர்களது பெயர்களான நாராயணன், திருச்சிற்றம்பலமுடையான் போன்றவையும் நாராயணன், வரதன், திருமால், அழகன் போன்றவையும் முக்கியம் வாய்ந்தவையாகும். நாராயணன் திருச்சிற்றம்பலமுடையான் என்ற பெயர் தந்தை விஷ்ணுவழிபாட்டைப் பேணியதையும் மகன் சிவவழிபாட்டைப் பேணியதையும் எடுத்துக்காட்ட, வரதன், திருமால், அழகன் போன்ற பெயர்கள் வைணவ மதத்தைச் சார்ந்தவர்கள்கூட சிவாலயங்களை அமைத்தனர் என்பதை எடுத்துக்காட்டுகின்றது. பொதுவாகத் தமிழகத் தில் சைவ–வைணவ மதங்களுக்கிடையே கசப்புணர்ச்சி நிலவியிருந்தாலும் கூட ஈழத்தில் இத்தகைய கசப்புணர்ச்சி காணப்படவில்லை என்பதற்குப் பதவியாவிற் கிடைத்துள்ள கல்வெட்டுக்கள் மட்டுமன்றி பொலநறுவையி லுள்ள சிவதேவாலயத்திலமைந்த 'அழகிய மணவாளன்', 'பள்ளி கொண் டான்' எனப் பெயர் கொண்டிருந்த வைணவ ஆலயங்களும் சான்று பகருகின்றன.

சோழரின் தலைநகராகப் பொலநறுவை விளங்கினுலும்கூட திரிகோண மலை மாவட்டமும் அவர்களின் செல்வாக்குக்கு உட்பட்டு இருந்தது. இம் மாவட்டத்தில் கிடைத்த சோழரின் ராசப் பிரதிநிதியாகிய 'சோழ இலங் கேஸ்வரன்' கல்வெட்டுக்கள் இவ்வாறு எண்ணத் தூண்டுவதோடு. என் ணிக்கையில் வேறெம் மாவட்டத்தையும்விட இங்குதான் தமிழ்க் கல் வெட்டுக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. தென்கிழக்காசிய வர்த்தகத் தில் சோழர் மேலாதிக்கம் கொண்டிருந்ததால் திரிகோணமலைத் துறை முகம் இதற்கு வாய்ப்பாகவும் அமைந்தது எனலாம். பல்லவர் கால நாயன் மார்கள் பாடல்களில் திருக்கோணேஸ்வரம் சிறப்பாக எடுத்துக்காட்டப் பட்டுள்ளது. மாதோட்டத்தைப்போன்று இங்கும் சோழர்கள் பல்லவர் காலக் கோயிலைத் திருத்தினர்களா அன்றிப் புதிய கோயிலை நிருமாணித்தார்களா என்று கூறுவது கஷ்டமாகத் தென்படுகிறது. என்ருலும் இக்காலத்தில் கோணேஸ்வரம் 'மச்சகேஸ்வரம்' என அழைக்கப்பட்டதென்பதைத் தக்ஷிண கைலாச புராணமும், கோணுசல புராணமும் கூறுவதுடன் இங்கு மானுங்

கேணி, நிலாவெளி ஆகிய இடங்களிற் கிடைத்த சோழர் காலக் கல்வெட்டுக்களும் இதனை உறுதி செய்கின்றன. (Gunasingham, S. 1974) சோழர்களாற் கட்டப்பட்ட கோயில் அழிந்தாலுங்கூடப் பிற்காலத்தில் இக்கோயிலின் பாகங்களைப் பயன்படுத்தி இந்துக் கோயில்கள் பல கட்டப்பட்டிருக்கலாமென ஊகிக்க இடமுண்டு. காரணம் திரிகோணமலை மாவட்டத்திலுள்ள பல இந்துக் கோயில்களின் தூண்களில் சோழர்கால எழுத்து வடிவம் காணப்படுவதோடு நிலாவெளிப் பிள்ளையாரின் கிணற்றின் படிக்கட்டிற் கூட "திருகோணமலை மச்சகேஸ்வரமுடைய மஹாதேவர்க்கு" என்ற வாசகம் பொறித்த கல்வெட்டுக் காணப்படுகின்றது. (குணசிங்கம், செ. 1973 : 105) நிலாவெளியிற் கிடைத்த கல்வெட்டு மச்சகேஸ்வரத்தின் அன்றாட செலவுகளை நிவர்த்தி செய்யத் தானமாகக் கொடுக்கப்பட்ட 250 வேலி நிலம்பற்றிக் கூறி இந்நிலத்தின் எல்லைகளைக் குறிக்கிறது. (Gunasingham, S. 1975 : 61–71)

கந்தளாயிற் கண்டுபிடிக்கப்பட்ட சோழஇலங்கேஸ்வரன் கல்வெட்டும் சோழரின் சமய நடவடிக்கைகள்பற்றிக் கூறுகின்றது. (Gunasingham, S. 1974 : 21–22) இக்கல்வெட்டு இங்கே ஆரம்பிக்கப்பட்ட 'ராஜராஜ சதுர்வேதிமங்கலம்' என்ற பிராமணக் குடியிருப்புப்பற்றிக் குறிக்கிறது. கோயிலை அண்டியே பிராமணர்கள் சமயக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக வாழுவதால் இங்கும் சோழர் காலக் கோயில்கள் இருந்தன என்றும், இவை முதலாவது ராஜராஜனால் தோற்றுவிக்கப்பட்டன என்பதும் ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்துக்களாக அமைகின்றன. இவ்விடத்திலே கண்டெடுக்கப்பட்ட மகாவிஷ்ணு, ஆவுடையார், பார்வதி, நந்தி ஆகியோர் சிற்பங்கள் சைவ, வைணவ வழிபாடுகள் இங்கே திழைத்தோங்கியதையும் எடுத்தியம்புகின்றன. இப்பிராமணர் குடியிருப்பு நிஸங்கமல்லன் காலம்வரை நீடித்ததற்கான சான்றுகள் இருப்பதால் கந்தளாயும் மச்சகேஸ்வரம்போன்று முக்கிய இந்து தலமாக விளங்கியது எனலாம். முதலாவது விஜயபாகு காலக் கல்வெட்டில் இங்கிருந்த சிவஸ்தலம் 'தென்கைலாசம்' என அழைக்கப்பட்ட சான்றும் இதனை உறுதி செய்கின்றது. இப்பிராமணக் குடியிருப்பாளர் தமது கருமங்களை ஆற்ற ஒரு உள்ளூர் நிறுவனமாகிய 'சபை' என்ற பெயரால் ஒரு அமைப்பைப் படைத்திருந்தனர் என்பதை இக்கல்வெட்டில் வரும் "பெருங்குடிப் பெருமக்கள்" என்ற வாசகம் எடுத்தியம்புகின்றது. சமகாலத் தமிழகக் கல்வெட்டுக்களிலும் பிராமணர் கிராமங்களிலியங்கிய சபையை நிர்வகித்தோர் இவ்வாறு அழைக்கப்பட்டது தெரிகிறது. இத்தகைய அமைப்பொன்றே கணிசமான தொகையினராகப் பிராமணர் இங்கு வாழ்ந்தனர் என்பதனை எடுத்துக்காட்டுகின்றது. இதே கல்வெட்டில் இங்குள்ள காளி கோயில்பற்றிய குறிப்புமுண்டு. துரதிஷ்டவசமாக இதுபற்றிய வேறு விவரங்கள் நமக்குக் கிடைக்காவிட்டாலும் இம்மாவட்டத்தில் காளி/துர்க்கை வழிபாடு பொலநறுவை மாவட்டத்திற் காணப்பட்டது போன்று நிலவியதென்பதைப் பறையனூரில் கிடைத்துள்ள துர்க்கையின் சிலை ஒன்று எடுத்தியம்புகின்றது. (வீரகேசரி, 13 – 7 – 1980)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் சோழரின் நடவடிக்கைகள்பற்றி நாம் அறியமுடியாதிருக்கின்றது. எவ்வாறாயினும் சோழர் முழு ஈழத்திலும் தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட முயன்றதாலும், ரோகணையில்

நடைபெற்ற கிளர்ச்சிகளை அடக்க இம்மாவட்டங்களும் நிச்சயமாக அவர்கள் ஆதிக்கத்தில் இருந்திருத்தல் வேண்டும். இருப்பினும் இதனை விரிவுபடுத்தத் தற்சமயம் சான்றுகள் கிடைக்காவிட்டாலும்கூட மட்டக்களப்பு மாவட்டத்தில் பழைமை வாய்ந்த திருப்படைக் கோயில்கள் பல இவர்களின் போஷிப்பைப் பெற்றிருக்கலாம். இவ்வாறேதான் தென்கிழக்கு ஈழத்திலுள்ள கதிர்காமமும் முக்கியம் பெற்றிருக்கலாம்.

சோழர் ஈழத்தைவிட்டுச் சென்றாலும் அவர்கள் வளர்த்த கலைமரபு நீடித்து நிலைத்தது என்பதற்கான தடயங்கள் திரிகோணமலை, அநுராதபுரம், யாழ்ப்பாண மாவட்டங்களில் காணப்படுகின்றன. திரிகோணமலையில் 1950ஆம் ஆண்டில் கண்டெடுக்கப்பட்ட சிவன், பார்வதி, சுகாசனமூர்த்தத்திலுள்ள சிவன், பார்வதி ஆகியோர், பிள்ளையார் போன்றோரது வெண்கலச் சிலைகள் பிற்காலச் சோழர் கலைமரபின் அம்சங்களுடன் காணப்படுகின்றன எனக் கருதப்படுகிறது. (Balendra, W. 1953) அநுராதபுரத்திலும் தனித்துவம் வாய்ந்த அர்த்தநாரீஸ்வரர் விக்கிரகம் ஒன்று 1982இல் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து 1985இல் வெளிவந்த 'ஈழமுரசு' என்ற நாளிதழ் செய்தி மேலும் இங்கு கண்டுபிடிக்கப்பட்ட வெண்கலச் சிலைகள்பற்றிய விவரங்களைத் தருகின்றது. (ஈழமுரசு, 9-7-1985) அஃதாவது

> 'அநுராதபுரப் பகுதியில் தற்போது நடைபெற்று வரும் அகழ்வாராய்ச்சியின்போது ஒன்பது இந்து விக்கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பத்தாம் பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை எனக் கணிக்கப்படும் இவ்விக்கிரங்களில் சில சிதைந்த நிலையில் காணப்பட்டன' எனக் கூறுகிறது.

இச்செய்தியை ''சற்றடே ரிவியூ'' என்ற ஆங்கிலப் பத்திரிகையும் பிரசுரித்து மேலும் பல விபரங்களைத் தந்துள்ளது. (Saturday Review 13-7-1985) அஃதாவது இவ்விக்கிரகங்களில் ஒன்றில் வரும் 'நானாதேசி' என்ற குறிப்புப்பற்றி இந்நாளிதழ் குறிப்பிடுவது முக்கியம் வாய்ந்த செய்தியாக அமைகிறது. இக்காலத்தில்தான் நானாதேசிகள் செல்வாக்குடன் காணப்பட்டனர் எனவும் முன்னர் கண்டோம். இவர்களின் சமய நடவடிக்கைள் பற்றிப் பதவியா, பொலநறுவை ஆகிய இடங்களில் கிடைத்துள்ள கல்வெட்டுக்கள் எடுத்தியம்புகின்றன. இவ்வாறேதான் அநுராதபுரத்திலும் பல இந்துக் கோயில்களை இவர்கள் அமைத்திருக்கலாமென்பதும் இவ்விக்கிரகங்கள் அழிந்த அக்கோயில்களிலே இவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டவை எனவும் எண்ணத் தூண்டுகிறது. யாழ் மாவட்டத்திலுள்ள கமால் வீதியில் கிடைத்துள்ள வெண்கலச்சிலை, சண்டேஸ்வரரது கற்சிலை ஆகியனவும் இம்மரபு வழிவந்தனவே எனக் கொள்ளப்படுகிறது. (வீரகேசரி 25-2-1979) இவ்வெண்கலச்சிலை துர்க்கையின் ஓர் வடிவமாகிய நந்தாவினது என்று பேராசிரியர் இந்திரபாலா அவர்கள் இனங்கண்டுள்ளார். (வீரகேசரி 25-2-1979)

சோழரிடமிருந்து ஈழத்தை மீட்டெடுத்த முதலாவது விஜயபாகுவின் (கி. பி . 1070 – 1110) முக்கிய பணியாக பௌத்த மதத்தைப் புனருத்தாரணம் செய்தல் அமைந்தது. சோழராட்சியில் வேண்டியளவு அரச ஆதரவு இல்லாததால் பௌத்த குருமாரின் சங்கம் சீர்குலைந்தது. வயோதிபர்

இறக்க, புதிதாக எவரும் சேரவில்லை. சிலர் இந்தியாவுக்கும் சென்று விட்டனர். இதனால் பர்மாவிலிருந்து பௌத்த பிக்குகளை வரவழைத்ததோடு புதிதாகவும் சிங்களக் குருமாரைச் சங்கத்தில் சேர ஊக்குவித்து மூன்று நிக்காயாக்களையும் ஒருங்கிணைத்தான் எனப் பொலநறுவையிலுள்ள வேளைக்காரர் கல்வெட்டு எடுத்துக்கூறுகிறது. (E.Z : II : 242 – 256) பௌத்த சமயத்தைப் பாதுகாக்கும் பொருட்டும் பௌத்த குருமாரின் வேண்டுதலுக்கமையவும் முடிசூடினன் என வேளைக்காரர் கல்வெட்டுக் கூறுகிறது. பௌத்தத்தை ஆதரித்தாலும் இவனது அரண்மனையில் இந்துச் செல்வாக்கு மலிந்திருந்ததையும் பௌத்த குருமாரைச் சாந்தப்படுத்து வதற்காகத் தனது அரசியையே தண்டித்தான் எனச் சூளவம்சம் கூறியுள்ளதையும் ஏற்கனவே கண்டோம். விஜயபாகுவின் ஆட்சிபற்றிப் பரணவித்தான அவர்கள்,

'அரசு கட்டிலேறின பின்னர் இந்து மத வழிபாட்டு முறைகளைப் புறக் கணிக்க முடியவில்லை. இவன் சோழர் காலச் சமய ஸ்தானங்கள் தொடர்ந்து இயங்க அனுமதித்ததோடு தனது காலத்தில் அமைக்கப் பட்ட சைவக் கோயில்களுக்கும் தனதாதரவை வழங்கினன்' எனக் கூறியுள்ளார். (Paranavitane, S. 1960 : 563)

இதற்குச் சான்றாக கந்தளாயில் இவன் மேற்கொண்ட சமய நடவடிக்கைகளைக் காட்டலாம். சோழரால் கந்தளாயில் அமைக்கப்பட்ட ராஜராஜேஸ் வரமும் அதனை அண்டியுள்ள 'ராஜராஜ சதுர்வேதிமங்கல'மும் இவன் காலத்தில் இவனது ஆதரவைப் பெற்றதோடு அம்மன்னன் தனது பெயரையும் சேர்த்து முறையே 'விஜயராஜேஸ்வரம்', 'விஜயராஜ சதுர்வேதிமங்கலம்' எனவும் இவற்றுக்குப் பெயரிட்டான். இதனால் தொடர்ந்தும் சோழர் விட்டுச்சென்ற இந்து நிறுவனங்கள் இவனது ஆதரவைப் பெற்றன என்பது வெள்ளிடைமலை. கந்தளாயிலுள்ள கோயிலுக்கு அளிக்கப்பட்ட தானத்தைப் பளமோட்டைக் கல்வெட்டு எடுத்தியம்புகிறது. (E. Z. IV : 191–196) இக்கல் வெட்டில் இக்கோயில் 'தென்கைலாசம்' என அழைக்கப்படுகிறது. நாகய் சாணி என்ற பிராமண விதவைப்பெண் இறந்த தனது கணவனான காராம் பைச் செட்டுஉஜ்ஜிய கிரமவித்தன் ஞாபகார்த்தமாக அளித்த தானத்தைக் கூறும் இக்கல்வெட்டு தானங் கொடுத்தோரின் எண்ணம் சரிவர நிறைவேறும் வண்ணம் பார்த்துக்கொள்ளும் பொறுப்பும் இங்கே இருந்த வேளைக்கார இராணுவப் பிரிவிடமிருந்ததைக் கூறுகிறது. தானமாக 35 காசும் 9 களஞ்சு பொன்னும் இக்கோயிலுக்கு அளிக்கப்பட்டது. இவற்றின் வருமானத்தி லிருந்து விளக்கேற்றல், பூந்தோட்டத்தைப் பேணுதல், ஏழு தேவதாசி களைப் போஷித்தல் போன்ற கருமங்களை இத்தானத்தை அளித்தவர் விரும்பியது தெரிகிறது. இதனால் சமகால தென்னிந்தியாவில் நிலவியது போன்ற கைங்கரியங்கள் ஈழத்திலுள்ள கோயில்களிலும் நடைபெற்றமை புலனாகின்றது.

விஜயபாகுவுக்குப் பின்னர் முடிசூடிய ஜெயபாகு (கி. பி. 1110–1112) காலப்பகுதி மிகக் குறுகிய ஆட்சிக்காலமாக அமைய இவன் பின்வந்த இரண்டாவது விக்கிரமபாகு (கி. பி. 1111–1132) இரண்டாவது கஜபாகு (கி. பி. 1132 – 1153), ஆகியோர் காலம் இந்து மதவளர்ச்சியில் முக்கிய காலமாகத் திகழ்ந்தது. இவர்கள் இருவரும் இந்துக்களாக இருந்ததால்

சிங்கள — பௌத்த மன்னர்களுக்கு நடக்கும் முறையான பட்டமளிப்பு விழாக்கூட இவர்களுக்கு நடைபெறவில்லை. இதனால் இவர்கள் ஆட்சிக் காலக் கல்வெட்டுகளிலெல்லாம் ஜெயபாகுவின் பெயரே காணப்படுகிறது. சூளவம்சமோ எனில் விக்கிரமபாகுவுக்கு முறையான முடிசூட்டுவிழா நடைபெறவில்லை எனக்கூறிக் கஜபாகுவின் முடிசூட்டுவிழா பற்றி ஒன்றுமே கூறவில்லை. பூஜாவலியா, ராஜவலியா போன்ற நூல்களில் ஈழத்தை ஆண்ட மன்னர் பட்டியலில் கஜபாகுவின் பெயர் காணப்படவில்லை. இதற்கெல்லாம் காரணம் இவர்கள் பௌத்தர்களாக இல்லாததே. (Kirubamune, S. 1976 : 12 - 32) சூளவம்சத்தில் விக்கிரமபாகு இந்துவாகவே செயற்பட்டான் என்பதை விளக்கப் பல சான்றுகள் உள. ஓரிடத்தில் சூளவம்சம் "அவசியமான யாகத்தையும் ஏனைய இந்துக் கிரியைகளையும் வேதங்களிலும் வேதாகமங்களிலும் கைதேர்ந்த தனது புரோகிதர்களாலும் ஏனைய பிராமணர்களாலும் நிறைவேற்றினான்" (C. V. LXII: 33 - 34) எனக் கூறுகிறது. இதுமட்டுமன்றி இவன் காலத்தில் இவனாற் கட்டப்பட்ட பௌத்த கோயில்களோ அன்றி அவற்றுக்குக் கொடுக்கப்பட்ட தானங்கள் பற்றியோ எதுவித சான்றுமில்லை. அதுமட்டுமல்லாமல் இவன் தன்னிச்சையாகப் பௌத்த கோயில்களின் நிலங்களைத் தனது சேவையிலிருந்தோருக்கு அளித்ததோடு நகரத்திலுள்ள விகாரைகளையும் வெளிநாட்டுப் படைவீரர்களின் வாசஸ்தலங்களாக மாற்றியதோடு தந்த தாதுக் கோயில்கள் போன்றனவற்றுக்குக் கொடுக்கப்பட்ட பொருட்களையும் தன்னிச்சையாக விரயஞ் செய்தான் எனவும் சூளவம்சம் கூறி இவனும் இவனது சகாக்களும் பௌத்த மதத்திற்கு முரணான முறையில் நடந்தனர் எனவும் கூறுகிறது. (C. V. LXI : 54–61) விக்கிரமபாகுவின் இந்துமதப் பற்றைக் காகம்பிலியாவக் கல்வெட்டு (E. Z. V. III : 404–408) மிகச் சிறப்பான முறையில் பின்வருமாறு கூறுகிறது. அஃதாவது 'பார்வதி — பதி — தத்தாசிர் — வீர — மகா – விருஷ நீதி பராயன்ய ராஜ நாராயண —' இதன் பொருள் யாதெனில் 'பார்வதியின் பதியாகிய சிவனால் ஆசீர்வதிக்கப் பட்டவனும் வீரம் மிக்கவனும் மகா நந்தியுமாகிய அவனுக்கு ஒழுக்கமே இறுதிக் குறிக்கோள். அதுமட்டுமன்றி அவன் நாராயணனைப்போன்ற மன்னனுமாவான்' என்பதாகும்.

விக்கிரமபாகு இந்து மதத்திற்கு அளித்த ஆதரவைக் குருநாகல் மாவட்டத்திலுள்ள மாகல என்ற இடத்தில் கிடைத்த கல்வெட்டுகள் எடுத்துக் காட்டுகின்றன. (E. Z. III : 302-312) இதில் மாகல என்ற இடமும் இவன் பெயரால் "விக்கிரமசாளமேகபுர" எனப் பெயர் மாற்றம் பெற்றதும் தெரிகிறது. இம்மரபை ஈழத்தில் சோழர் சிறப்பாகக் கடைப்பிடித்தனர். மேற்கூறிய கல்வெட்டில் இங்குள்ள சிவதேவாலயம் "விக்கிரமசாளமேகஸ்வரம்" என அழைக்கப்பட்டுள்ளது. கந்தளாயிலுள்ள சோழர் காலக் கோயிலுக்கு விஜயபாகு தனது பெயரையும் சேர்த்து இட்டதுபோல் இவனும் சோழரால் இங்கே அமைக்கப்பட்ட கோயிலுக்குத் தனது பெயரை இட்டான் எனக் கொள்ளலாம். அத்துடன் இக்கல்வெட்டு சோழ மன்னன் குலோத்துங்கன் மகளாகிய 'சுத்தமல்லியாழ்வார்' இக்கோயிலில் 'நந்தா விளக்கு' ஒன்று நிரந்தரமாக எரிவதற்கு வைப்பீடு செய்த பத்துக் காசுகள் பற்றியும் கூறுவதோடு இவ்விளக்கு சூரிய சந்திரர் நிலைக்குமட்டும் நீடித்து நிரந்தரமாக எரியவேண்டுமென்ற அவளின் விருப்பத்தையும் எடுத்தியம்புகின்

றது. இக்கோயில் பிற்காலத்தில் இடிக்கப்பட்டு அதன் கற்களையும் தூண்களையும் கொண்டு புதுமுத்தாவ என்ற இடத்தில் ஒரு பௌத்த கோயில் கட்டப்பட்டாலும் இதைச் சுற்றிக் காணப்படும் லிங்கமும் பிற சான்றுகளும் இக்கோயில்பற்றிய உண்மையைக் கூறுகின்றன.

ஈழத்தின் வடபகுதியை இராஜரட்டையைப் பொலநறுவையைத் தலைநகராகக் கொண்டு விக்கிரமபாகு ஆன தக்கிண தேசத்தை மானுபர்ணன் ஆட்சி செய்ததைச் சூளவம்சம் கூறுகின்றது. மானுபர்ணனின் பட்டத்து இளவரசியாகிய ''இரத்தினவலி'' ஒரு கலிங்க இளவரசியேயாகும். இவளது மகன்தான் பொலநறுவைக் காலத்தில் பிரசித்தம் பெற்ற முதலாவது பராக்கிரமபாகுவாகும். இதனால் இக்காலத்தில் மானுபர்ணனின் அரண்மனையில் இந்துச் செல்வாக்கு நிறைந்து காணப்பட்டது எனலாம். இம்மன்னனுக்கு முதலில் பிறந்த பிள்ளைகள் இருவரும் பெண் பிள்ளைகளே. தனது வம்சத் தொடர்பை நீடிக்கவும், பொலநறுவை மன்னன் விக்கிரமபாகுவைத் (II) தோற்கடிக்கவும் தனக்கு ஒரு ஆண்மகவு பிறக்கவேண்டுமென இவன் அவாக்கொண்டிருந்தான். அப்போது இம்மன்னன் தனது வம்சத்தைப்பற்றிக் குறிப்பிடுகையில் ''உலகிலுள்ள எல்லா அரச வம்சங்களிலும் தூயவம்சமெனப் போற்றப்படும் வம்சமாகிய சந்திர வம்சம்'' எனச் சூளவம்ச ஆசிரியர் குறிப்பிடுகிறார். (C. V. LXII : 5 – 7) மேலும் இம்மன்னன் பற்றிச் சூளவம்சம் குறிப்பிடுகையில் ஆண்மகவை விழைந்த இவன் உலகியல் விடயங்களில் கவனம் செலுத்தாது, தனது அரசியற் பொறுப்பை மந்திரிமாரிடம் ஒப்படைத்துவிட்டுப் பல புண்ணிய நடவடிக்கைகளில் ஈடுபட்டான் என்றும் இவ்வாறு ஈடுபடுகையில் ஓர் இரவைத் தெய்வங்களுக்கெல்லாம் அரசனாக விளங்கும் தெய்வத்தின் கோயிலில் (King of the Gods) கழித்தான் எனவும் கூறுகிறது. (C. V. LXII : 11 – 12) அப்போது அதிகாலையில் அத்தெய்வம் அவனுக்குக் காட்சி கொடுத்தது. இக்காட்சியைச் சூளவம்சம் சிறப்பாகக் கூறுகிறது. அஃதாவது மினுமினுப்பான உடையும் ஆபரணங்களும் அணிந்து நறுமணம் வீசும் மலர்மாலையும் சூடி ஜோதிமயமாகத் தோற்றமளித்த இத்தெய்வத்தின் காட்சி அதிகாலையில் சூரிய ஒளியால் வானமண்டலம் ஒளிப்பிழம்பாய்க் காட்சியளிப்பதை ஒத்திருந்ததென்பதாகும். (C. V. LXII : 12 – 14) அத்துடன் இக்காட்சியின்போது இம்மன்னனுக்குப் புகழ்வாய்ந்த மகன் பிறப்பான் எனவும் இத்தெய்வத்தால் திருவாய்மலர்ந்தருளப்பட்டது.

மேற்கூறிய சம்பவத்தில் எமது சிந்தனையைத் தூண்டுவது யாதெனில் சூளவம்சத்தில் வரும் கூற்றாகிய ''தெய்வங்களுக்கெல்லாம் அரசனாகி விளங்கும் தெய்வத்தின் கோயில்'' என்ற கூற்றேயாகும். இக்கூற்று இந்திரனையே குறிக்கின்றது எனச் சூளவம்சத்தை மொழிபெயர்த்த கெய்கர் கருதினாலும் இதை ஏற்றுக்கொள்ள முடியாது. மானுபர்ணன் தக்கிண தேசத்தில் அரசாட்சி செய்ததால் அவ்விடத்தில் பிரசித்தி பெற்ற கோயிலொன்றிலேதான் இக்கனவை இவன் கண்டிருத்தல் வேண்டும். இந்திரனின் பிரசித்தி பெற்ற கோயில் இவ்விடத்தில் இல்லை. ஆனால் பிரசித்திபெற்ற தேவஸ்தலமாகப் பண்டுதொட்டு 'தேவிநுவர' விளங்கியதென்பதற்குச் சான்றுகள் உள. (சிற்றம்பலம், சி. க. 1984) இதே இடத்திற்குள் உப்புல்வன் (மாயவன்) ஆலயம் கி. பி. 7 ஆம், 8 ஆம் நூற்றுண்டுகளிலிருந்தது. முதலா

வது விஜயபாகு போன்றோர் இவ்விடத்தில் பௌத்த விகாரை ஒன்றையும் கட்டியதாகச் சூளவம்சம் குறிக்கிறது. பராக்கிரமபாகு, நிஸங்கமல்லன் காலத்தில் "தேவிநுவர" பற்றிய குறிப்பும் சூளவம்சத்தில் வந்தாலும் நிஸங்கமல்லன் இவ்விடத்தைத் தனது நாடளாவிய யாத்திரையின்போது தரிசித்தான் என இவனது கல்வெட்டு எடுத்துக்காட்டுகின்றது. (Paranavitane, S. 1960 : 514) இருந்தும் விஜயபாகு, பராக்கிரமபாகு நிஸங்கமல்லன் ஆகியோரது காலத்தில் இவ்விடத்திலுள்ள இந்துக்கோயில்பற்றிய குறிப்புக் காணப்படவில்லை. எனினும் *13 ஆம்* நூற்றாண்டின் நடுப்பகுதியில் இரண்டாவது பராக்கிரமபாகுவின் காலத்தில் அவனது சகோதரியின் மகனாகிய வீரபாகு சாவகர்மீது தான் அடைந்த வெற்றியைக் கொண்டாடும் முகமாக இங்குள்ள உப்புல்வன் கோயிலில் விழா எடுத்ததாகச் சூளவம்சம் கூறுகிறது. (C. V. LXXXIII : 49) இக்கூற்றிலிருந்து இக்கோயில் இக்காலத்தில் மட்டுமன்றி இதற்கு முன்னரும் பல நூற்றாண்டுகள் பிரபல்யம்வாய்ந்ததொன்றாக இருந்திருத்தல் வேண்டுமென்பது தெளிவாகின்றது. மூன்றாவது பராக்கிரமபாகுவின் நைய்மானக் கல்வெட்டில் உப்புல்வன் 'தெய்வங்களது அரசன்' எனப் பொருள்தரும் "தேவராஜ" என விளிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (Veluppillai, A. 1972 : 56-67) இதனால் மானாபர்ணன் வழிபட்ட கோயில் இது எனக் கொள்ளலாம். இவன் காலத்திற்கும் இதற்கு முன்னரும் பின்னரும் இக்கோயில் செல்வாக்குப் பெற்றிருந்தது எனலாம். போத்துக்கேயர் காலத்திலும் இதன் செல்வாக்கு நீடித்திருந்தது. இவ்வாறேதான் கதிர்காமமும் அமைந்திருந்தது.

நாட்டின் தென்மேற்கே எவ்வாறு உப்புல்வன் (மாயவன்) கோயில் பிரசித்தம் பெற்றிருந்ததோ அவ்வாறேதான் தென்கிழ்த் திசையில் கதிர்காமமும் பிரபல்யமடைந்திருந்திருந்தது. கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முன்பிருந்தே இக்கோயிலின் தோற்றம் அமைந்திருந்தாலும் இதன் தொடர்ச்சியான வரலாற்றைப் பௌத்த மத வரலாற்று நூலாகிய சூளவம்சம் தரவில்லை எனலாம். என்றாலும் அருணகிரிநாதர் போன்றோர் புகழ்பாடுமளவுக்கு இத்தலம் பெருமை பெற்றிருந்ததையும், போத்துக்கேயர் கால நூல்களில் இதுபற்றிய குறிப்பு வருவதை நோக்கும்போதும் பொலநறுவைக் காலத்திலும் இக்கோயில் சிறந்த வழிபாட்டுத் தலமாக விளங்கியிருக்கலாமெனலாம். இதைப்போன்றே கிழக்கிலங்கையிலும் புகழ் பெற்ற முருகன் ஆலயங்களும் சிறந்து விளங்கியிருக்கலாம். சிங்கள மக்களின் நாட்டார் வழிபாட்டிலும் முதற்கடவுளாகிய மாயோனுக்கு (உப்புல்வனுக்கு) அடுத்ததாகச் சேயோன் (கதிர்காமக் கடவுள்) வணங்கப்படுவதும் மேற்கூறிய கருத்தை வலுவூட்டுவனவாக இருக்கின்றன. (சிற்றம்பலம், சி. க. *1983*)

சூளவம்சம் பிறிதோரிடத்தில் மானாபர்ணன் தனக்கு மகன் பிறப்பது பற்றிக் கண்ட கனவுபற்றியும், அக்கனவுக்கான விளக்கத்தை இம்மன்னன் புரோகிதர்களை அழைத்து அறிந்தான் எனவும் கூறுகிறது. (C. V. LXII:28) மகப்பேறு சிறப்பாக நடப்பதற்காக இம்மன்னன் தனது அரண்மனைப் புரோகிதர்களாலும், வேத, வேதசாஸ்திரங்களில் தேர்ச்சி பெற்ற ஏனைய பிராமணர்களாலும் நன்மை பயக்கும் வேள்விகளையும் ஏனையவற்றையும் செய்வித்தான். (C. V. LXII : 33 – 34) இவனால் பிராமணர்களுக்கு விசேடமாகத் தானங்களும் வழங்கப்பட்டன. (C. V. LXII : 42-43)

மகன் பிறந்தவுடன் அங்கலட்சண சாஸ்திரத்தில் கைநேர்ந்த தனது புரோகிதரையும் ஏனைய பிராமணரையும் அழைத்து அவர்களுக்கு வழக்கமாகக் கொடுக்கும் மரியாதையையும் ஏனைய சிறப்புக்களையும் செய்து மகனின் அங்கலட்சணங்களின் சிறப்புக்கள்பற்றி விளக்குமாறும் பணித்தான். (C. V. LXII : 45 – 47) இந்துமத ஆசாரமுறைப்படி நடக்கும் கிரியைகளான காதுகுத்துதல், சோறூட்டல் ஆகியனவற்றைப் பராக்கிரமபாகுவுக்குச் செய்ததோடு (C. V. LXX : 53 - 54) உபநயனக் கிரியையும் நடந்தேறியது. (C. V. LXIV : 13).

இரண்டாவது கஜபாகு இந்துவாகவே வாழ்ந்தான். இதனையே சூளவம்சம் இம்மன்னன் வெளிநாட்டிலிருந்து மதநம்பிக்கையற்றவர்களை அழைத்து வந்து நாட்டை அவர்களால் நிறைத்தான் எனக் குறிப்பிடுகிறது. (C. V. LXX : 53 - 54) பொதுவாகச் சூளவம்சத்தில் இந்துக்களை மதநம்பிக்கையற்றவர்கள் 'தவறான நம்பிக்கைகளை அல்லது கோட்பாடுகளைத் தழுவுபவர்கள்' எனக் குறிப்பிடுவதும் ஈண்டு நோக்கற்பாலது. இரண்டாவது விக்கிரமபாகு காலத்தில் பாதுகாப்பிற்காக ருேகணைக்கு எடுத்துச் செல்ல பட்ட அரச சின்னமாகிய தந்ததாதுவும் அத்துடன் எடுத்துச் செல்லப்பட்ட புத்தரது பிச்சாபாத்திரமும் (C. V. LXI : 61 – 62) இவன் காலத்திலும் பொலநறுவைக்கும் எடுத்துவரப்படாததொன்றே இவ்விரு மன்னர்கள் பௌத்த மதத்திற்கு ஆதரவை நல்கவில்லை என்பதனை எடுத்தியம்புகின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக முதலாவது பராக்கிரமபாகுவைத் தனது வாரிசாக ஏற்றபின் பொலநறுவையில் வசிப்பதற்குப் பதிலாகக் கஜபாகு II கந்தளாயில் (கங்காதடாகவில்) வாழ விரும்பியதும் இவனது இந்துமத ஈடுபாட்டினை எடுத்துக் காட்டுகின்றது எனச் சிறீமா கிருபாமுன அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார். (Kirubamuna, Srima. – 1976) சூளவம்சம்கூட இவ்விடத்திலே இவன் சந்தோஷமாக வாழ்ந்தான் எனக் குறிக்கிறது. (C. V. LXXI : 1 – 2) எனினும் பேராசிரியர் பத்மநாதன் அவர்கள் இக்காரணத்தோடு ஈழத்தின் வடகிழக்கில் இக்காலத்தில் செல்வாக்குடன் விளங்கிய திராவிடக் குடிமக்கள் இம்மன்னனுக்கும் இவன் தந்தைக்கும் அளித்த ஆதரவுமே இம்மன்னனைத் தனது இறுதிக்கால வாசஸ்தலமாகக் கந்தளாயைத் தேர்ந்தெடுக்க வைத்தது எனக் கருதுகிறார். (Pathmanathan, S. 1982) பொலநறுவையிலுள்ள பாண்டியர் கலைப்பாணியிலமைந்த முதலாவது சிவதேவாலயத்தைக் கட்டுவித்தவனும் இவனே எனவும் நம்பப்படுகிறது. (Navaratnam, C. S. 1964) கந்தளாயிலுள்ள பிராமணக் குடியிருப்புக்களுக்கான எல்லைக்கல் நாட்டப்பட்ட செய்திபற்றிக் கல்வெட்டொன்றின் மூலம் அறியமுடிகிறது. (Swaminathan, K. D. 1960 : 43 – 46) இதனால் ராஜராஜனால் ஆரம்பிக்கப்பட்ட இக்குடியிருப்பு கஜபாகுவின் போஷிப்பையும் பெற்றது எனலாம். கப்புறுவடுஓயாத்தூண் கல்வெட்டின்மூலம் (E. Z. V. III : 394 – 404) இந்துமதக் கிரியைகளில் இவனுக்கிருந்த ஈடுபாடு மேலும் புலப்படுகிறது. இக்கல்வெட்டுக் கந்தப் பெருமானின் விழாவுக்காகச் சிலைகளையும் ஏனைய பொருட்களையும் யாத்த சிற்பியாகிய 'டாபெறரங்கிடாகே கிணுபி' என்பவனுக்கு இவனால் நிலம் வேதனமாகக் கொடுக்கப்பட்டதைக் கூறுகின்றது. இச்சிற்பி கிரியைகளைச் சீராகவும் செம்மையாகவும் நடாத்தும் திறமை பெற்றிருந்தான் என்பதும், மன்னன் செய்ய விழைந்த லக்ஷபூசைக்காகக் கந்தனுடைய விக்

கிரகம் உட்படப் பல்வேறு சிலைகளையும் ஓவியங்களையும் வடித்தமைக்காக நிலத்தைப் பெற்றான் என வரும் குறிப்பு மன்னனது இந்துமத ஈடுபாட்டைச் சுட்டிக்காட்டுகின்றது.

கோணேசர் கல்வெட்டிலும் திருக்கோணாசல புராணத்திலும் கஜபாகு திருக்கோணேஸ்வரத்தைப் போஷித்தது குறிக்கப்பட்டுள்ளது. இக்காலத்தில் இத்தலம் 'தென்கைலாசம்' எனவும் அழைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இக்கோயிலின் பூசகர்கள் வீரசைவர்களாக (பாசுபதர்களாக) இருந்திருந்தார்கள். காரணம் கோணேசர் கல்வெட்டில் கஜபாகு கோணேஸ்வரத்தை நோக்கி வருவதையறிந்த பாசுபதர் கடலில் வீழ்ந்திறந்தனர் எனக் கோணசர் கல்வெட்டுக் கூறினாலும் அதற்குரிய காரணத்தைக் கூறவில்லை. இவர்கள் இறக்கக் கஜபாகு பிராமணர்களைப் பூசகர்களாக நியமித்தான்போலும். பிராமணர்கள் சைவநாய முதன்மை, வேதநாய முதன்மை என்ற பட்டங்களையுடைய இருபாக முதன்மையினராய் இக்கோயிலின் அர்ச்சகராக விளங்கினர். கோணேசர் கல்வெட்டில் பிறிதோரிடத்தில் (பக். 11 - 13) இங்கே பௌத்தர்களுக்கும் இந்துக்களுக்குமிடையே நிலவிய வாதப் பிரதிவாதங்களால் கிரியைகள் தடைபட்டிருந்தது பற்றியும், அப்போது கஜபாகு வாணிபன், தானத்தார், வரிப்பத்தார் போன்றோரை அழைத்து விசாரணை செய்தபின்னர் முன்னர்போல் சமயக் கிரியைகள் நடைபெற ஆவன செய்தான் என்ற குறிப்பும் வருகிறது. இம்மன்னன் தான் சோழ நாட்டிலிருந்து பல்வேறு குடிகளையும் அழைத்துக் கோயிற் குடிமைகளாகவும் நியமித்தான். இவன் நூறு பொற்காசையும் கோணநாதருக்கீந்து நிலத்திலும் பிறவற்றிலுமிருந்து கிடைக்கப்பெறும் வருமானம் கோயிலுக்குக் கிடைக்கவும் ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தான்.

இறுதியாக அநுராதபுர பொலநறுவை மாவட்டங்களில் கஜபாகு மன்னன் காலத்தில் விளங்கிய பிராமணக் குடியேற்றங்கள் பற்றிக் குறிப்பிடுதல் அவசியமாகின்றது. அநுராதபுரத்திலுள்ள மகாகிருண்டேகம என்ற இடத்திலுள்ள 'ஜயங்கொண்ட சாளமேக சதுர்வேதிமங்கலம்' பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. சோழர் காலத்தில் இக்குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டிருக்கலாமென முன்னர் கூறியிருந்தோம். எனினும் அக்காலத்திலிருந்து கஜபாகு காலம்வரை இது நீடித்ததை இக்கல்வெட்டுக் கூறுகிறது. கஜபாகு இதனைப் போஷித்தது பற்றிய குறிப்புக் காணப்படாவிட்டாலும் கூட இந்துவாகிய இவன் இதனை ஆதரித்திருப்பானென்று கொள்வதில் தவறில்லை. (Indrapala, K. 1971 : 6 – 9) பொலநறுவை மாவட்டத்திலுள்ள கிங்குருக்தமன என்ற இடத்தில் கிடைத்துள்ள கல்வெட்டில் இப்பகுதியில் உள்ள 'பாடோனிமாசார்' என்ற இடத்திலுள்ள 'பிரமஸ்தானம்'பற்றிய குறிப்பு வருகிறது. (Indrapala, K. 1971 : 14 – 17) பிரமஸ்தானமென்பது கிராமத்தில் பிராமணர் வாழும் பகுதியைக் குறிக்கும். இக்கல்வெட்டு உடகமு ஆயித்தன் என்பவன் (கஜபாகு மன்னனின் ஆட்சியின் நாற்பதாவது ஆண்டில்) அகம்படி இராணுவப் பிரிவில் சிவிகை தூக்குபவனாகக் கடமையாற்றியபோது தனக்குச் சீவனமாகக் கொடுத்த நிலத்தின் வருமானத்தின் ஒரு பகுதியை (ஒரு அமணத்தை) விற்று இப் பிராமணர் குடியிருப்புக்கு அதன் வருமானத்தை அளித்ததைக் குறிக்கிறது.

முதலாவது பராக்கிரமபாகு (கி. பி. *1153–1186*) தனது தேவநாகலக் கல்வெட்டில் கஜபாகு, மானுபர்ணு ஆகியோரிடம் தான் போரிட்டதற்கான காரணம் விஜயபாகுவின் பின்னர் சீரழிந்த பௌத்த மதத்தைப் புனரமைப்புச் செய்வதற்கே எனக் கூறச் சூளவம்சம் பௌத்த சாசனத்தின் மேன்மைக்காக இவன் உழைத்ததைக் கூறிக் கஜபாகு II மதநம்பிக்கையற்றவர்களால் ராஜரட்டையை நிரப்பினான் என அறிந்து பராக்கிரமபாகு I கோபங் கொண்டதாகவும் கூறுகிறது. (C. V. LXX : 53 – 56) எவ்வாறாயினும் பராக்கிரமபாகு இந்துச் சூழலில் வளர்ந்தாலும் கூட அரச மதமாகிய பௌத்தத்திற்கு வேண்டிய ஆதரவை நல்கத் தவறவில்லை. ஒரு சமயம் அரசியல் நோக்கங்களுக்காகவும் இவ்வாறு செய்திருக்கலாம். முக்கால் நூற்றாண்டுக்கு முன்னர் விஜயபாகு எவ்வாறு ஆதரவின்றிச் சோழராட்சியில் சீரழிந்த பௌத்த மதத்தைப் புனருத்தாரணம் செய்ய முற்பட்டானோ அவ்வாறுதான் விஜயபாகு மறைவுக்குப் பின்னர் சீரழிந்த பௌத்தத்தையும் பராக்கிரமபாகு புனரமைப்புச் செய்யவேண்டியிருந்தது. விக்கிரமபாகு, கஜபாகு மன்னர்கள் வேண்டிய ஆதரவை நல்காததே இத்தகைய நிலைக்குப் பௌத்தத்தை இட்டுச் சென்றது. இதனால் பர்மாவிலிருந்து பராக்கிரமபாகுவால் பிக்குகள் வரவழைக்கப்பட்டதோடு பௌத்த நூல்களும் வரவழைக்கப்பட்டன. இப்பிக்குகள் கூட முந்திய மன்னர் காலத்தில் அரசின் போஷிப்பின்மையால் பர்மா சென்றிருக்கலாம் அல்லது அவ்வாறு சென்றவர்களின் சீடர்களாகவும் இருக்கலாம். (Paranavitane, S. 1960 : 564) பௌத்த சங்கத்திலும் ஊழல்கள் மலிந்து காணப்பட்டதால் போலிகளை அகற்றும் பணியும் பராக்கிரமபாகுவிடம் இருந்தது. எனினும் பிராமணருக்கும் இந்து மதத்திற்கும் விஜயபாகுவைப் போன்றே பராக்கிரமபாகுவும் ஆதரவை நல்கியதைச் சூளவம்சம் பல இடங்களில் குறிப்பிடுகின்றது. இம்மன்னன் பிராமணருக்குத் தானம் கொடுத்ததோடு பிராமணர் பிராயச்சித்த சடங்குகளை மேற்கொள்ளுவதற்கும் மந்திரங்களை ஓதுவதற்கும் முறையே கேமமண்டபத்தையும் அழகிய தரணிகாராவையும் நிருமாணித்தான். (C. V. LXXIII : 71 – 72) இதைவிடச் சூளவம்சத்தில் இவன் பதின்மூன்று இந்துக் கோயில்களை அமைத்தானென்றும் சீரழிந்த நிலையிலிருந்த 79 இந்துக் கோயில்களைப் புனருத்தாரணம் செய்தானென்ற குறிப்பும் (C. V. LXXIX : 19 – 22) பிறிதோரிடத்தில் 24 கோயில்களைப் புனரமைத்தான் எனவும் வருகிறது. (C. V. LXXIX : 80 – 81) துர்அதிஷ்டவசமாக இக்கோயில்களின் அழிபாடுகள் நமக்குக் கிடைக்கவில்லை.

கலிங்க வம்ச மன்னர்களில் முக்கியமானவன் நிஸங்கமல்லனாகும். (கி. பி. *1187 – 1196*) இம்மன்னன் மக்கள் ஆதரவைப் பெறுவதற்காகப் பௌத்த மதத்தின் மேன்மைக்கு உழைப்பவன் தானே எனப் பலவாறு உரைத்தாலும் கூட இவன் வளர்ந்த சூழ்நிலை, சமய நடவடிக்கைகள் ஆகியவை இந்து மதத்தில் இவனுக்கிருந்த ஈடுபாட்டினை எடுத்தியம்புகின்றன. பொலநறுவையிலுள்ள பிறிதிதானகமண்டபப் பாறைக் கல்வெட்டு (E. Z. II . I : 165 - 178) இவனது இளமைக் காலச் சூழ்நிலை பற்றிக் கூறுகிறது. இந்துவாகிய இவன் தாய் தந்தையர் பெயர்கள் முறையே பார்வதி, ஜெயகோப ஆகும். இவன் பிறந்த நேரம், நட்சத்திரங்களின் சிறப்பு, இவனது அங்கலட்சணம் ஆகியவற்றை அவதானித்த இவனுடைய தகப்பன் தனது வம்சத்தை அலங்கரிக்க ஒரு திலகத்தைப் பெற்றுவிட்டதாக மகிழ்ந்தான்

என இக்கல்வெட்டுக் கூறுகிறது. நிஸங்கமல்லனின் இந்துமத நடவடிக்கைகள் பற்றிப் பொலநறுவை, கந்தளாய் ஆகிய இரு இடங்களிற் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகள் கூறுகின்றன. பொலநறுவையிலுள்ள முதலாவது சிவதேவாலயத்தில் கிடைத்துள்ள கல்வெட்டில் (E. Z. II: 146-148) 'இச்சிவ தேவாலயத்தில் தான் நடாத்திய நவக்கிரக சாந்தியின்போது தன்னைத் தூய்மைப்படுத்துவதற்காகத் தூய்மைச் சடங்கு சார்ந்த ஸ்நானத்தில் ஈடுபட்டான்' என்ற செய்தி காணப்படுகிறது. அத்துடன் இங்கு கிடைத்த பிறிதொரு கல்வெட்டின் மூலம் இவனால் இங்குள்ள பிராமணருக்குப் 'பிராமண சத்திரம்' ஒன்றமைக்கப்பட்டதும் தெரிகிறது. (Paranavitane, S. 1960 : 512) இவனது கந்தளாய் கல் ஆசனக் கல்வெட்டில் (E. Z. II : 287-88) இங்கு நிலவிய "சதுர்வேதி பிரமபுரம்"பற்றிய குறிப்பு வருகிறது. இக்கூற்று சோழர் காலத்தில் அமைக்கப்பெற்ற பிராமணர் குடியிருப்பு தொடர்ந்தும் நிஸங்கமல்லன் காலம் வரை மன்னரது ஆதரவு பெற்று இயங்கியதென்பதை நிரூபிக்கின்றது. அத்துடன் இவ்விடத்தில் "பார்வதி தர்மசாலா" என்றொரு தர்மசாலையையும் இம்மன்னன் ஸ்தாபித்தான். இவன் மேலும் இங்குள்ள கல்லாசனத்திலிருந்து இவ்விடத்தில் நடைபெற்ற இசை, நடன நிகழ்ச்சிகளையும், பார்வதி தர்மசாலையில் தானம் கொடுத்ததையும் அவதானித்ததாகவும் இக்கல்வெட்டுக் கூறுகிறது. ஈழத்தில் இவன் சுற்றுலா மேற்கொண்ட இடங்களில் சிவனொளிபாதம், தேவிநுவர ஆகியனவும் குறிப்பிடப்படுகின்றன. தமிழ்நாட்டிலுள்ள ராமேஸ்வரத்தையும் இவன் புனரமைத்ததாகக் கூறப்படுகிறது.

கி. பி. 12ஆம், 13ஆம் நூற்றாண்டுகளில் இந்து மதம் பொலநறுவை. பதவியா, திரிகோணமலை ஆகிய இடங்களில் பெற்றிருந்த சிறப்பினைப் பல வகையான ஆதாரங்கள் எடுத்தியம்புகின்றன. பொலநறுவையிலுள்ள அகவுண்டாவைச் சந்தியில் கிடைத்துள்ள 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ்க் கல்வெட்டில் இங்குள்ள சிவதேவாலயத்திற்குக் கொடுக்கப்பட்ட தானம் குறிப்பிடப்படுகிறது. அத்துடன் இச்சிவதேவாலயத்திற்கான சிலை கூடச் சோழ நாட்டிலுள்ள ஸ்ரீரங்கத்திலிருந்து கொண்டுவரப்பட்டதும் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கோயிலில் பகல்விளக்கு எரிப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளை இக்கல்வெட்டுக் குறிக்கிறது. தானப் பொருள்களாகப் பசுக்களும் எருதும் குறிப்பிடப்படுகின்றன. பசுக்களில் ஆறு சினை எய்தப்பட்ட நிலையிலும் ஏனையவை சாதாரண நிலையிலும் அளிக்கப்பட்டன. இவ்வாறு அளிக்கப்பட்டதன் நோக்கம் விளக்கெரிப்பதற்குத் தேவையான நெய்யைத் தொடர்ந்தும் இவைகளிடமிருந்து பெறுவதற்கேயாம். (Velup-pillai, A. 1972 : 32-36)

பதவியாவும் சோழர் காலந்தொட்டு இந்து மதம் வளர்ச்சி பெற்ற இடங்களிலொன்றாக விளங்கியது. கி. பி. 12ஆம், 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர் சாசனத்தில் இங்குள்ள சிவ, காளி கோயில்களுக்கு இவர்கள் கொடுத்த ஆதரவு கூறப்படுகிறது. (Velup-pillai, A. 1971 : 46-57) இங்கே கிடைத்த கல்வெட்டில் 'காளி கணம்' பற்றிய குறிப்புண்டு அத்துடன் இக்கல்வெட்டுப் பூரணமாக வாசிக்க முடியாத நிலையில் பா வடிவில் அமைந்து காணப்பட்டாலும் கூட வணிகர் குழுவாகிய "வீரக்கொடியர்" இங்குள்ள சிவன் கோயிலுக்குக் கொடுத்த

தானத்தைக் குறிக்கிறது. இதில் வரும் 'விக்கிரகஞ் செய்து கொடுத்தோம்' என்ற வசனம் இக்கோயிலுக்காக விக்கிரகங்களையும் இவர்களே அளித்திருக்கலாமென்பதை எடுத்துக்காட்டுகின்றது. (Veluppillai, A. 1972 : 19–22) இச்சந்தர்ப்பத்தில் பா வடிவில் அமைந்துள்ள இங்கே கிடைத்துள்ள கல்வெட்டுப்பற்றிக் கூறுதல் அவசியமாகின்றது. (Veluppillai, A. 1972 : 28–31) இது மூன்றாவது சிவதேவாலயத்தில் பெறப்பட்டது. இதன் காலம் கி. பி. 12ஆம் நூற்றாண்டாகும். இப்பா 'வலகலி' என அழைக்கப்பட்ட சிவன் மீது பாடப்பட்டதாகும். நாயன்மார்களால் கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம்பற்றிப் பாடப்பெற்றாலும் ஈழத்துக் கவிஞரால் சிவன்மேல் பாவுருவில் பாடப்பெற்ற முதற் கல்வெட்டு இதுவே என இதனைப் பதிப்பித்த பேராசிரியர் வேலுப்பிள்ளை அவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். இனிப் பாவை நோக்குவோம். அஃதாவது,

"உத்தமர் தங்கோயில் வலகலி எனலும்
நித்த நியமம் நெறி வளர்
சித்தமுடன் சீர் இளமை சேர்ந்த
பதியில் விளையாரம்ப பேர்இளமை யார்த்துகள்
போதா வாயிரங் கொண்டுரைப்பர் திரு
சுத்தமாக முயன்றான் முயன்ற திரு."

இப்பாடலிலே உயிரின் தோற்றுவாயாக இருப்பவரும், என்றும் இளமை குன்றாதவருமான சிவனின் பாதங்களின் தூசிக்குச் சமர்ப்பணம் செய்யும் ஆயிரம் மலர்கள்மூலம் ஈட்டும் அருட்செல்வத்திற்கு ஒப்பாகத் தூய முறையில் ஈட்டப்பட்ட (வணிகரின்) செல்வம் சமப்படுத்தப்பட்டுள்ளது. இக்கல்வெட்டை ஆராய்ந்த பேராசிரியர் வேலுப்பிள்ளையவர்கள் இக்கல்வெட்டுச் சான்று 'சிவபாத வணக்கம்' பதவியாவில் இக்காலத்தில் நிலைத்திருந்தது எனவும் கூறியுள்ளார். சிவனது பாத வழிபாடு இக்காலகட்டத்தில் ஈழத்தில் மட்டுமன்றித் தென்கிழக்காசிய நாடுகளிலும் நிலைத்திருந்தது என்பது ஈண்டு கவனிக்கத்தக்கது.

இச்சந்தர்ப்பத்தில் பதவியாவில் 1970இல் கண்டெடுக்கப்பட்ட நந்தி இலட்சனையையுடைய ஒரு வெண்கல முத்திரைபற்றிக் குறிப்பிடுதல் அவசியமாகின்றது. (இந்திரபாலா, கா. 1972 : 76) இது பதவியாவிலுள்ள சிவதேவாலயமொன்றிலேதான் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் காலம் கி. பி. 13ஆம் நூற்றாண்டாகும். இதன் ஒரு பக்கத்தில் நந்தி ஒரு விரிந்த தாமரை மலரிலுள்ளது. நந்தியின் இருமருங்கினும் குத்துவிளக்குகள் காணப்படுகின்றன. நந்தியின் மேலே பிறைச் சந்திரனும், குடையும் உள்ளன. அத்துடன் இம்முத்திரையில் நந்தி வலதுபுறம் பார்த்தவண்ணம் கால்களைப் பூரணமாக மடக்கிக்கொண்டு காணப்படுகிறது. இதனை யாழ்ப்பாண மன்னரது நாணயங்களோடு ஒப்பிடும்போது அவர்கள் நாணயங்களிலும் நந்தி, பிறை, நட்சத்திரங்கள் உள. அத்துடன் யாழ்ப்பாண மன்னரது நாணயங்களில் நந்தி இடது புறம் பார்த்தவண்ணம் ஒரு காலைப் பூரணமாக மடக்காது சிறிது உயர்த்திக்கொண்டிருப்பதையும் அவதானிக்க முடிகிறது. எனினும் பதவியா முத்திரையின் முக்கியத்துவம் இதில் பொறிக்கப்பட்ட சாசனத்திற்றான் உண்டு. இச்சாசனத்தை,

''ஸ்வஸ்தி ஸ்ரீமத் த்விஜா வாஸ
ஸ்ரீபதிக்ராம வாஸிநாஹ்
மஹேஸஸ்யை ததிந்த்ராதி
மௌலி ராஜித ஸாஸநம்''

எனப் பரணவித்தான அவர்கள் படித்துள்ளார். (இந்திரபாலா, கா. 1972 : 76) வடமொழியிலமைந்த இச்சாசனத்தின் எழுத்துக் கிரந்தத்திலுள்ளது. இதனைத் தமிழில் 'ஸ்வஸ்தி! சிருடைய பிராமணர் வசிக்கின்ற ஸ்ரீபதி கிராமத்தில் வதிகின்ற, இந்திராதியோருடைய முடிகளினாலே அலங்கரிக்கப்பட்ட, மஹேஸருடைய சாசனம்' என மொழிபெயர்த்துள்ளார் பேராசிரியர் இந்திரபாலா அவர்கள். இச்சாசனத்தில் பதவியாவுக்கும் ஸ்ரீபதிக் கிராம என்ற பெயர் காணப்படுகிறது. இதனை முறையே ஸ்ரீ. பதி, கிராம என்று மூன்று கூறுகளாகப் பிரிக்கலாம். இவற்றுள் 'பதி' என்பது இதன் பழைய பெயராகும். இதனுடன் திரு என்ற பொருள் தரும் 'ஸ்ரீ' என்ற சொல்லும், 'ஊர்' எனப் பொருள்படும் 'கிராம' என்ற சொல்லும் சேர்த்தே இவ்வாறு 'ஸ்ரீ பதி கிராம' என இது அழைக்கப்பட்டது. இதிலே வரும் 'மகேசர்' என்ற சொல்பற்றிய விளக்கம் அவசியமாகின்றது. சிவனுக்கும் 'மகேஸ' என்ற பெயர் காணப்படுவதாலும், இம்முத்திரை சிவதேவாலயத்திற் கண்டெடுக்கப்பட்டதாலும் இம்முத்திரை சிவனைக் குறித்தது என்று குறிப்பிடுவதற்குப் பதிலாக இத்தேவாலயத்தை நிர்வகித்த சிவனை வழிபட்டோரைக் குறித்தது என்பதே பொருத்தமானதாக அமைகின்றது. பதவியாவிலே 'காளி கணம்' அஃதாவது காளி கோயிலை நிருவகித்தோர்பற்றிய குறிப்பும் காணப்படுவதால் அதேபோல் இச்சிவதேவாலயத்தையும் நிருவகித்தோர் இவ்வாறு 'மகேஸர்' எனவும் அழைக்கப்பட்டிருக்கலாம். எவ்வாறாயினும் சோழர் காலத்தில் காணப்பட்ட இந்து நிறுவனங்கள் பதவியாவில் கி. பி. 13 ஆம் நூற்றாண்டுவரை நீடித்திருந்ததை இம்முத்திரை உணர்த்துகிறது. பதவியாவில் கவுண்டியை கோத்திரத்தைச் சேர்ந்த பிராமணர் வாழ்ந்ததையும் இங்குள்ள தமிழ்க் கல்வெட்டு எடுத்துக்காட்டுகிறது. (Veluppillai, A. 1971 : 74–75)

இக்காலத்தில் ஈழத்தின் புகழ் பூத்த சிவாலயங்களாகிய திருக்கேதீஸ்வரமும் திருக்கோணேஸ்வரமும், சிறப்புடன் விளங்கின எனலாம். திருக்கோணேஸ்வரம் அமைந்துள்ள திரிகோணமலை மாவட்டம் ஒரு முக்கியமான மாவட்டமாகவும் விளங்கியதையும் இக்காலச் சான்றுகள் உணர்த்துகின்றன. இதனாற்றான் சோழர் பின்னும் அரசுகட்டிலேறிய விஜயபாகு, விக்கிரமபாகு, கஜபாகு போன்றோர் நடவடிக்கைகள் மட்டுமன்றிக் குளக்கோட்டன் போன்றோர் சமய நடவடிக்கைகளும் இங்கு காணப்படுகின்றன. ஆனால் மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் இங்கிருந்த இந்து நிறுவனங்கள் சோழர் காலத்தில் சிறப்புடன் விளங்கினாலும் சோழருக்குப் பின்னர் அவற்றைச் சிங்கள மன்னர்கள் எவ்வாறு போஷித்தார்கள் என்பதனை அறியப் போதிய தடயங்கள் தற்போது காணப்படவில்லை. என்றாலும் பொலநறுவை அரசின் வீழ்ச்சியின் பின்னர் பாண்டியரது படைஎடுப்புக்களிலும் இத்தலம் பாண்டியரால் போஷிக்கப்பட்டதற்கான தடயங்கள் காணப்படுவதால் சோழரைத் தொடர்ந்தும் மாதோட்டத்திலுள்ள இந்து நிறுவனங்கள் சிறப்பாக இயங்கின எனக் கொள்ளலாம். துர்அதிஷ்டவசமாகப் பௌத்த மத வரலாற்று நூலாகிய சூளவம்சம் இவைபற்றிக்

கூறத் தவறிவிட்டது எனலாம். மன்னர் — சிலாபக் கரையோரம் சோழர் காலத்து வணிகத்தில் முக்கிய இடத்தைப் பெற்றதாலும் இப்பகுதியில் தமிழ்க் குடியேற்றங்கள் காணப்பட்டதாலும் ''முன்னீஸ்வரம்'' கூட இக்காலத்தில் முக்கியம் பெற்ற தலமாக விளங்கியிருந்தது எனலாம். (Indrapala, K. 1969) வடக்கே அமைந்த, யாழ்ப்பாணமாலையில் கூறப் படும் திருத்தம்பலேஸ்வரர், திருத்தம்பலேஸ்வரி ஆலயங்கள் சோழர் காலத்தில் பேணப்பட்டிருக்கலாம். இவ்வாலயங்களோடு தொடர்புடைய கதைதான் 'உக்கிரசிங்கன்' கதையாகும். இவ்வாறேதான் மாவிட்டபுரத் துடன் தொடர்புடைய மாருதப்புரவல்லிக் கதையாகும். ஓரளவில் இத் தலங்களது தலபுராணமாக இவை அமைந்தாலும்கூட யாழ்ப்பாணத் தில் கருங்கல் காணப்படாததனால் சுண்ணும்புகொண்டே இக்கோயில்கள் கட்டப்பட்டன என்பதாலும் பலமுறை இவை கட்டப்பட்டன எனக் கொள்ளலாம். இவ்வாறு பலமுறை கட்டப்பட்ட சான்றுகள் எமக்குக் கிடைக்காவிட்டாலும் ஒருசில சான்றுகள் எமக்குக் கிடைக்கின்றன. இவற் றுள் மேற்கூறிய கதைகள் ஒருசிலவாகும். இதேபோன்று சோழர் தாபித்த நல்லூர்க் கோயிலின் தொடர்ச்சியான வரலாறு எமக்குக் கிட்டவில்லை. இவ்வாறேதான் வல்லிபுரம், புன்னாலை ஆகியவற்றில், வளர்ச்சி பெற்ற மாயோன் வழிபாட்டுத் தலங்களின் வரலாறும், செல்வச்சந்நிதியில், தெற்கி லுள்ள கதிர்காம வழிபாட்டு முறையிலியங்கிய முருக வழிபாட்டின் வர லாறும் நமக்குக் கிடைக்கவில்லை.

நிஸங்கமல்லனது ஆட்சியைத் தொடர்ந்து பொலநறுவையில் இரண்டு சகாப்தங்களாகக் கலிங்கர் ஆட்சி நடைபெற்றது. பின்னர் கி. பி. 1215இல் கலிங்க வம்சத்தவனுகிய மாகனது படைஎடுப்பு நிகழ்ந்தது. ஆராய்ச்சி யாளர், மாகன் கி. பி. 1247 வரையும் பொலநறுவையில் ஆட்சி செய்த பின்னர் யாழ்ப்பாணம் சென்முன் எனக் கருதுகின்றனர். இதனுல் யாழ்ப் பாண அரசைத் தோற்றுவித்த 'விஜயகூழங்கைச் சக்கரவர்த்தி' இவனே எனக் கருதுகின்றனர். யாழ்ப்பாணவைபவமாலை போன்ற நூல்கள் இவ் விஜயகூழங்கைச் சக்கரவர்த்தி தென்னிந்தியாவிலிருந்து பல உயர் குலத் தவரையும் பல்வேறு சாதிப் பிரிவினரையும் யாழ்ப்பாணத்திலும் வன்னி யிலும் குடியேற்றினுன் எனக் கூறுகின்றன.

சூளவம்ச ஆசிரியர் கூற்றின் மூலம் மாகனது படையில் 24,000 பேர் இருந்தமை தெளிவாகின்றது. இதில் பெரும்பான்மையோர் தமிழராகும். இதனுற்போலும் மட்டக்களப்பு மான்மியத்தில் மாகன் தமிழ் மதமாகிய சைவத்தைப் பரப்பியவன் என விளிக்கப்படுகிருன். மட்டக்களப்பு மான் மியம் மாகன் தோப்பையிலுள்ள (பொலநறுவையில்) புத்த விகாரை, பௌத்த ஆலயங்கள் எல்லாவற்றையும் இடித்துப் புத்த குருமாரைத் தேடிப்பிடித்துச் சிறைப்படுத்தியது குறிப்பிடப்பட்டுள்ளது. (நடராசா, F. X. C. 1962 : 53) சூளவம்சம் மாகனது நடவடிக்கைகள்பற்றி மேலும் விரிக்கிறது. தவருன நம்பிக்கைகளை மக்கள் கடைப்பிடிக்கும் வண்ணம் அவர்களை நிர்ப்பந்தித்ததோடு கலப்பின்றி இயங்கிய நான்கு வர்ணங்களுக்கு மிடையேயும் குழப்ப நிலையை உருவாக்கினுன். (C. V. LXXX : 75) அத் துடன் கிராமங்கள், வயல்கள், வீடுகள், தோட்டங்கள், அடிமைகள், மாடு கள், எருமைகள் போன்ற எவை எவை சிங்களவருக்குச் சொந்தமாக இருந்

தனவோ அவற்றை எல்லாம் பறித்துக் கேரளருக்குக் கொடுத்தான். விகாரைகள், பிரிவேனுக்கள், ஏனைய வழிபாட்டிடங்களைத் தனது படைவீரரின் வசிப்பிடங்களாக மாற்றினன். பௌத்த மதத்திற்குச் சொந்தமான செல்வங்கள், சொத்துக்கள் ஆகியனவற்றை அபகரித்து நரகத்திற்குப் போவதற்கான பல்வகையான பாவங்களுக்கும் உரித்தானன். (C. V. LXXX : 61–79) மாகன் பிக்குமார்களைச் சித்திரவதை செய்ததோடு அவர்களது வருமானங்களைப் பறித்ததால் பலர் தமிழகத்திலுள்ள சோழ, பாண்டிய மண்டலங்களுக்குச் சென்றனர் எனச் சூளவம்சம். பூஜாவலிய போன்ற நூல்கள் கூறுகின்றன. பிறிதோரிடத்தில் சூளவம்சம் மாகன் கூட்டத்தினர் 'பிரபலமான பல நூல்களைப் பிய்த்தெறிந்து கிழித்து அங்குமிங்குமாக வீசி எறிந்தனர்' எனவும் கூறுகின்றது. (C. V. LXXX : 67) மாகனது இந்த நடவடிக்கைகளுக்குப் பலர் பலவித வியாக்கியானம் அளிக்கின்றனர். இதில் பிரதானமானது அரசியல் நோக்கம் ஆகும். அதாவது மக்களைக் கொடுரப்படுத்தி அவர்களுக்கு அதிவை ஏற்படுத்தினல் தனது ஆட்சிக்கு எதிராக அவர்கள் கிளர்ச்சி செய்யமாட்டார்கள் என்பதாகும். தனது அரசியல் சாதனைகளுக்குப் பௌத்த சங்கம் பெரிய தடையாக இருந்ததால் அவர்களை இவ்வாறு கொடுமைப்படுத்தினன் எனவும் கூறுகின்றனர். மாகன் மக்களைக் கொள்ளையடித்துத் தனது படைவீரரையும் திருப்தியடையச் செய்தான் என்பதும் மறுப்பதற்கில்லை. இவையெல்லாவற்றையும்விட மாகனது மேற்கூறிய நடவடிக்கைகளுக்கு அவன் தழுவிய மதமாகிய வீரசைவமே காரணம் எனவும் சிலர் வாதிடுகின்றனர். (Liyanagamage, A. 1968 : 98–132) இவ்வீரசைவம் கி. பி. 12ஆம் நூற்றுண்டில் கர்நாடகத்தில் வளர்ச்சி கண்டது. ஈழத்திலும் கஜபாகு (II) மன்னன் காலத்தில் திருக்கோணேஸ்வரத்தின் அர்ச்சகர்களாக இவர்கள் காணப்பட்டனர். இவர்களைப் பாசுபதர் எனவும் அழைப்பர். லிங்கத்தைக் கழுத்தில் தரித்துச் சென்றதால் 'லிங்காயர்கள்' எனவும் இவர்கள் அழைக்கப்பட்டனர் இவர்கள் இந்து மதத்தின் ஏனைய பிரிவுகளைக்கூட வெறுத்தவர்கள். இவர்கள் நம்பிக்கை யாதெனில் ஆத்மா சிவனிடத்திலிருந்தே புறப்பட்டு இறுதியில் சிவனிடமே ஒடுங்குகின்றது என்பதாகும். இவ்வாறு ஒடுங்கும் அனுபவத்தை 'லிங்காங்க சாமாரஸ்யம்' என இவர்கள் அழைப்பர்.

மட்டக்களப்பில் மாகன் மேற்கொண்ட சமய நடவடிக்கைகளுக்கான சான்றுகள் உள. பொதுவாக இவனைத் தமிழ் மன்னனென்றே மட்டக்களப்புக் கோயில்களில் இருக்கும் பட்டயங்கள் கூறுகின்றன. பழுகாமத்தில் அரிருக்கையை அமைத்திருந்த இவன் பட்டிருப்புக்கருகாமையிலுள்ள போரைதீவுச் சித்திரவேலாயுத சுவாமி கோயில், கொக்கட்டிச்சோலை தான் தோன்றீஸ்வரர் கோயில் ஆகியவற்றைக் கட்டி அவைகளுக்கு நெல் வயல்களையும் மானியமாகக் கொடுத்தான். (கந்தையா, வி. சீ. 1964 : 408–409) இச்சந்தர்ப்பத்தில் திருக்கோயிலிலுள்ள மேற்படி சித்திரவேலாயுத சுவாமி கோயிலே மட்டக்களப்பிலுள்ள முதலாவது திருப்படைக் கோயில் மட்டுமன்றித் தேசத்துக் கோயில் என மக்களால் போற்றப்படுவதும் ஈண்டு நினைவுகூரற்பாலது. கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரர் கோயிலும் மற்றொரு திருப்படைக் கோயிலாகும். இக்கோயில்களின் நிருவாகம், கலிங்க வேளாளரிடமே இருந்ததும் இங்கே குறிப்பிடத்தக்கது. தான்தோன்றீஸ்வரர் கோயிலில் பூசை செய்யும் பிரிவினர் இன்றும் வீரசைவத்தைச் சேர்ந்த

சங்கமரென அழைக்கப்படுகின்றனர். சீவன்முத்தர் நிலையிலே இருப்பவர்கள்தான் இவர்கள். முன்பொருகால் பண்டைய கிழக்கிலங்கைக் கோயில்களிலெல்லாம் இவர்களே பூசகர்களாக இருந்தனர் என்றும் ஆனால் இன்று தான்தோன்றீஸ்வரர் கோயிலில் மட்டுமே இவர்கள் பூசகர்களாக விளங்குகின்றனர் எனவும் கொள்ளப்படுகின்றது.

மட்டக்களப்பு மான்மியம், மட்டக்களப்பு முழுவதுமே தமிழ் மதமே வளரச்செய்த மாகன் அங்குள்ள குடிகளை ஏழாகப் பிரித்து அவர்களுக்கு வகுத்த கோயிற் கடமைகளையும் கூறியுள்ளது. அவையாவன;

''சொல்லரிய விளக்கேற்றல் பூவெடுத்தல் தூசகற்றல் சாணமிடல் அணி விளக்கல் நல்ல மலர்மாலை கட்டல் மேளமீட்டல் நற்சந்தனமரைத்திடுதல் நெல்லுக்குத்தல் துல்லியமாய் வளர்ச்சிவிகை ஏந்திச்செல்லல் தானிகட்டல் அமுது வைத்தல் முதன்மைபாப்பான் வல்லபதம் நீர் வார்த்தல் அகத்தில் தொண்டு புரியுமென்று மாகோனும் வகுத்துப் பின்னும்''

என்பதாகும். எனவே மாகனது வருகை கிழக்கு மாகாணத்தில் இந்துமத வளர்ச்சியில் ஒரு முக்கிய கட்டமாக அமைந்தது எனக் கொள்ளலாம். வடக்கே யாழ்ப்பாண ராச்சியத்தைத் தோற்றுவித்த இவனது சமய நடவடிக்கைகள்பற்றிப் பிறிதோரிடத்தில் ஆராயப்படும்.

திரிகோணமலையில் மாகன் காலத்தில் இந்து சமய நடவடிக்கைகளில் ஈடுபட்ட மன்னனொருவனுகிய 'சோடகங்கன்' கல்வெட்டொன்று கிடைத்துள்ளது. (Paranavitane, S. 1955 : 170–173) இக்கல்வெட்டின் காலம் கி. பி. 1223 ஆகும். சோடகங்கன் என்ற பெயரைக் குளக்கோட்டன் சூடியிருந்ததாகத் தக்ஷிணகைலாச புராணம் கூறுகின்றது. இதனுல் இரு பெயர்களும் ஒன்றையே குறிக்கின்றது எனலாம். இதனுல் குளக்கோட்டனின் காலம் கி. பி. 5 ஆம் நூற்ருண்டல்ல, ஆனுல் 13 ஆம் நூற்ருண்டே எனவும் அறிஞர் கொள்ளுகின்றனர். திரிகோணமலையில் சோழர் பணியும் மரபுகளும் நன்ருக வேரூன்றியமையால் கங்க வம்சத்தவன் சோழரைக் குறிக்கும் 'சோழ' என்ற அடைமொழியையும் சேர்த்திருக்கலாமெனவும் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வேலுப்பிள்ளை, ஆ. 1985) இக்குளக்கோட்டன் மனுநீதிகண்ட சோழனுகப் போற்றப்படுவதும், கோணேசர் கல்வெட்டில் சோழ மன்னன் ராஜராஜனை நினைவூட்டும் வகையில் 'ராசராசனுகிய குளக்கோட்டுராசன்' என்ற குறிப்பு வருவதும் ஈண்டு நினைவுகூரற்பாலது. இனிக் கல்வெட்டை நோக்கும்போது வடமொழியிலமைந்த இக்கல்வெட்டின் பெரும்பகுதி உடைந்துவிட்டாலும் கூட எஞ்சிய பகுதி கோணேஸ்வரக் கோயிலின் ஒரு பகுதியே எனப் பரணவித்தானு இனங்கண்டுள்ளார். இக்கல்வெட்டைப் பதிப்பித்த பரணவித்தானு அன்று தெரிவித்த கருத்து மிக முக்கியமானதொன்ருகும். அஃதாவது,

''மகாசேனன் மேற்கொண்ட துன்புறுத்தல்களின் விளைவாகப் பௌத்த சமயத்தைச் சாராத சமயங்களின் கோயில்கள் தற்காலிகமாக (திரிகோணமலையில்) அழிக்கப்பட்டாலும் மக்களுடைய விசுவாசத்தைப்

பெறுவதற்குப் பிராமண நிலையங்களுடன் பௌத்த நிலையங்கள் போட்டியிட்டபொழுதிலும் பௌத்த சமயம் இத்துறைமுக நகரமாகிய திரிகோணமலையிலிருந்து பின்வாங்கவேண்டியிருந்தது. போத்துக்கேயர் மூர்க்கத்தனமாக இந்து சமயத்தை நசுக்க நினைத்தபோதிலும் இன்று வரை இந்து சமயமே அங்கு நிலைத்துநிற்கிறது.

குளக்கோட்டன் புனருத்தாரணம் செய்த கோணேஸ்வர ஆலயம் பற்றிக் கோணேசர் கல்வெட்டு பின்வருமாறு உரைக்கிறது. (சோமஸ்கந்தர், மா. 1968) அஃதாவது,

‘திருந்து கலி பிறந்து ஐநூற்றெருபதுடன்
  இரண்டாண்டு சென்ற பின்னர்
புரிந் திடபமாதமதில் ஈரைந்தாந் தேதி
  திங்கள் புணர்ந்த நாளில்
தெரிந்த புகழ் ஆலயமும் சினகரமும்
  கோபுரமும் தேரூர் வீதி
பரிந்து ரத்ன மணிமதிலும் பாபநாசச்சுனையும்
  பகுத்தான் மேலோன்.’ (பாட்டு 23)

குளக்கோட்டன் திருப்பணியைப் பிறடறிக் கோட்டையிலுள்ள தமிழ்ச் சாசனமும் நினைவு கூர்கிறது. அச்சாசனத்தில்,

‘முன்னே குளக்கோடன் மூட்டுந் திருப்பணியைப்
பின்னே பறங்கி பிரிக்கவே – மன்னவபின்
பொண்ணாத தனை இயற்ற அழித்தே வைத்து
எண்ணுரே பின்னரசர்கள்.’

என வருகிறது.

குளக்கோட்டனின் காலம் கி. பி. 436 என வரும் யாழ்ப்பாணவைபவ மாலையின் கருத்து ஏற்றுக்கொள்ள முடியாததொன்ருக இருந்தாலும் கூட இவனது நடவடிக்கைகள் பற்றி யாழ்ப்பாணவைபவமாலை தரும் செய்தி முக்கியமானது. (சபாநாதன், குல. 1949 : 8 – 9). அச்செய்தி பின்வருமாறு அமைந்துள்ளது.

‘‘கி. பி. 436இல் மனுநீதிகண்ட சோழன் மகன் குளக்கோட்டு மகாராசன் யாத்திரை பண்ணித் திருக்கோணேசர் மலையிற் சேர்ந்து கோணேசர் சிவாலயத்தைத் தரிசித்துத் தம்பலகாமத்திற் பழுதுபட்டுக் கிடந்த கோணேசர் சிவாலயத்தைப் பழுதுபார்ப்பித்து அக்கிரகாரம் முதலிய வேலைகள் அனைத்தையும் திருத்துவித்துக்கொண்டிருந்தான்.’’

மேலும் தெரிவிக்கையில்,

‘‘குளக்கோட்டு மகாராசன் திருப்பணியை நிறைவேற்றி யவ்வாலயப் பணிவிடைகளை நிறைவேற்றுவதற்கும் கோணேச லிங்கத்திற்குப் பூசனை புரிவிப்பதற்கும் செலவு வரவுகளுக்காக ஏழு நாடுகளில் வயல் நிலங்களையும், தோப்புக்களையும் ஏற்படுத்தி அவைகளிற் பயிரிட்டு வருமானஞ்

செலுத்தும்படி வன்னியர்களை அழைப்பித்துக் குடியிருத்தித் தன் நாட்டுக்கு மீண்டான். அந்நாள் முதல் அவ்வருமானங்களால் ஆலயப் பணிவிடைகளும் அந்தணர் அக்கிரகாரங்களும் மடங்களும் சம்பிரமமாகச் சிறந்து விளங்கின."

கோணேசர் கல்வெட்டு, திருக்கோணாசல புராணம், தட்சணகைலாச புராணம் ஆகியவற்றில் குளக்கோட்டன் கோணேஸ்வரக் கோயிற் கடமைகளை நிறைவேற்ற மேற்கொண்ட பணிகள் பற்றிய குறிப்பு வருகிறது. இவன் தமிழ்நாட்டிலுள்ள மருங்கூரிலிருந்து வளவர் சாதியைச் சேர்ந்த முப்பது குடும்பங்களைத் திரிகோணமலையிலமர்த்தித் 'தானத்தார்' என்ற பட்டப் பெயரையும் அவர்களுக்களித்தான். காரைக்காலிலிருந்து இருபது குடும்பங்களை அழைத்துவந்து 'பண்டாரத்தார்' என்ற பட்டம் கொடுக்கப் பட்டது. திரிகோணமலையிலுள்ள பள்ளவெளி அவர்களுக்குக் கொடுக்கப் பட்டது. திருநெல்வேலியிலிருந்து காராளர் சாதியைச் சேர்ந்த பிரபுத்துவ மரபினர் அழைத்து வரப்பட்டு அவருக்கு 'முதன்மை' என்ற பட்டம் கொடுக்கப்பட்டது. கோயில் விழாக்களுக்கு இவரே பொறுப்பாகவிருந்தார். இவருக்குக் கட்டுக்குளத்தூர், நிலாவெளிக் கிராமங்கள் கொடுக்கப்பட்டன. கோணேசர் கல்வெட்டு மேலும் ஐந்து ஆசாரிகள் (சிற்பிகள்) சோழ நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டு திரிகோணமலையில் குடியமர்த்தப் பட்டதைக் கூறுகிறது. இறுதியாக மதுரையிலிருந்து ஒருவன் அழைத்து வரப்பட்டு அவனுக்கு வன்னிபம் (வன்னியன்) என்ற பட்டமும் கொடுக்கப் பட்டது.

சற்று விரிவாக ஆராய்ந்தால் மருங்கூரிலிருந்து அழைத்துவரப்பட்ட முப்பது குடிகளது பரம்பரையினர் இறைவன் முன் ஆலாத்தி எடுத்தல், நடனமாடல், பன்றி குற்றல் போன்ற கடமைகளைச் செய்தனர். பன்றி குற்றல் என்பது வேட்டைத் திருவிழாவையே குறிக்கும். இவை தானத்தாரின் கடமைகளாக இருந்தன. வரிப்பத்தார் பட்டாடை கொய்தல், கட்டல், புட்ப பத்திரங்கள் எடுத்தல், தூர்தல், விளக்கேற்றல், தளிசை தட்டுமுட்டு இவைகளை விளக்குதல், தீர்த்தமெடுத்தல், நெல்லுக் குத்துதல், சாணம் மெழுகல், சந்தனம் அரைத்துக் கொடுத்தல் ஆகிய கடமைகளிலீடுபட்டிருந்தனர். தானத்தார், வரிப்பத்தார் ஆகியோரிடையே நடுநின்று நீதியையும், ஒழுங்கையும் நிலைநாட்டி நகரை அரசு செய்வது மதுரையிலிருந்து அழைத்துவரப்பட்ட தனியுண்ணாப் பூபாலனது கடமையாகவிருந்தது. குளக்கோட்டன் அமைத்த கோயில் பாண்டியர் கலை மரபில் அமைந்திருந்ததென்பதை நிரூபிக்கும் வண்ணம் இப்பகுதியிற் சான்றுகள் கிடைத்துள்ளன. போத்துக்கேயர் இக்கோயிலை இடித்த போது இதன் அழிபாடுகள் கடலில் வீழ்ந்தன. இவற்றை ஆதர் கிளாக், மைக் வில்சன், ரொட்னி ஜொங்க்ல்ஸ் ஆகியோர் படம்பிடித்துள்ளனர். (இந்திரபாலா, கா. 1970 : 26). இவற்றுள் தாமரைச் சின்னங்கள் பொறிக்கப்பட்ட தூண்கள், கதவு நிலைகள் ஆகியவை அடங்கும்.

மட்டக்களப்பு மான்மியத்தில் ஆடகசவுந்தரி மகாசேனனை மணந்தாள் எனக் குறிக்கப்படுகிறது. இம்மகாசேனன் உண்மையிலே குளம் தொட்டு வளம் பெருக்கிய குளக்கோட்டனே. இம்மன்னனும் கோணேஸ்

வரத்திற்குத் திருப்பணிகள் செய்தவன் கூட. ஆடகசவுந்தரியின் மகனே சிங்கருமாரன் என மட்டக்களப்பு மான்மியம் கூற, கோணேசர் கல்வெட்டும் இதனை உறுதிப்படுத்துவதால் இச்சிங்ககுமாரன்தான் யாழ்ப்பாண வைபவமாலையில் 'உக்கிரசிங்கதை' வருகிறான் எனப் பரணவித்தானு கருதுவது நியாயமாகத் தெரிகிறது. உக்கிரசிங்கன் — மாருதப்புரவல்லி கதைகள் கி. பி. 8 ஆம் நூற்றாண்டெனக் கொள்ளப்பட்டாலும்கூட இக் கதையில் ஒரு வரலாற்று உண்மை உண்டு. அஃதாவது பொலநறுவையில் மாகன் ஆட்சி நடைபெற வட, கிழக்குப் பிராந்தியங்களில் இந்தகைய குறுநில மன்னர்கள் ஆட்சி செய்தனர் என்பதே. மாருதப்புரவல்லி பற்றி யாழ்ப்பாணவைபவமாலைச் செய்தி பின்வருமாறு அமைகின்றது.

> 'மாருதப்புரவல்லி தனக்குக் குதிரைமுகம் நீங்கிய காரணத்தினுற் கோயிற் கடவையென்னுங் குறிச்சிக்கு மாவிட்டபுரம் எனப் பெயர் சூட்டி அவ்விடத்திலே கந்தசாமி கோயிலைக் கட்டுவிக்க ஆரம்பித்து அதற்கு வேண்டிய சகல வஸ்துக்களும் விக்கிரகங்களும் பிராமணரும் வரும்படி பண்ணவேண்டுமென்று பிதாவாகிய திசையுக்கிரசோழனுக் குத் திருமுகம் அனுப்பினாள். அப்போது திசையுக்கிரசோழன் சகல ஆயத்தங்களும் பண்ணிக்கொண்டு பெரிய மணத்துளார் என்னும் தீட்சிதர் மூலம் சகல தளபாடங்களையும் கந்தசாமி, வள்ளியம்மன், தெய்வநாயகி அம்மன் விக்கிரகங்களையும் மணத்துளார் கையில் ஒப்புவித்து அனுப்பிவைத்தனன். தீட்சிதர் அவைகளைக் கொண்டு வந்து காசாத்துறையில் வந்திறங்கினர். கந்தசாமி விக்கிரகங்கள் வந் திறங்கிய காரணத்தால் அத்துறை காங்கேசன்துறை எனப் பெயர் பெற்றது.'

எவ்வாருயினும் சிவ, முருக, மாயோன், அன்னை வழிபாடுகள் யாழ்ப் பாண மாவட்டத்தில் பண்டுதொட்டு நிலவியவை. (சிற்றம்பலம், சி. க. 1984) இத்தகைய வழிபாட்டுத் தலங்கள் காலத்திற்குக் காலம் புதுப்பித் துக் கட்டப்படுவதும் மரபு. இத்தகைய மரபொன்றையே மாருதப்புரவல்லி- உக்கிரசிங்கன் கதைகள் பிரதிபலிக்கின்றன என எண்ணத் தூண்டுகின்றது; சோழர் காலத்தில் நல்லூரிலுள்ள கோயில் பற்றிக் கண்டோம். இவ் வாறே மாயோன், அன்னை வழிபாட்டிற்குரிய வல்லிபுரம், பொன்னாலை, நாகேஸ்வரி அம்மன் ஆலயங்களும் சிறப்புற்றிருந்திருக்கும். துர் அதிஷ்டவச மாக இவைபற்றிய விபரம் நமக்குக் கிட்டவில்லை. வன்னி மாவட்டத்திலும் உருத்திரபுரம் சிவன் கோயில், ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரர் கோயில் போன்றவையும் மாகனது ஆதரவைப் பெற்றிருக்கலாம்.

இக்கால இந்துக் கோயில்களை நோக்கும்போது பொலநறுவையிலுள்ள 2, 5, 6 இலக்கமுள்ள சிவதேவாலயங்களை, விட ஏனையவை கி. பி. 12 ஆம், 13 ஆம் நூற்றுண்டைச் சேர்ந்தனவாகும். இவற்றுள் பெரும்பாலானவை மாகனது ஆட்சியில் கட்டப்பட்டனவாகும். இப்பிற்பட்ட சிவதேவாலயங் களில் மூன்றுவது சிவதேவாலயத்தைவிட ஏனையவை செங்கல்லினுலேயே அமைக்கப்பட்டன. முதலாவது சிவதேவாலயம்கூடப் பாண்டியர் கலைப் பாணியில் கட்டப்பட்டது. விஷ்ணுதேவாலயங்களில் இரண்டாவது விஷ்ணு

தேவாலயத்தைவிட ஏனையவை செங்கற்களினலே கட்டப்பட்டன. பொலநறுவையைவிட வடமத்தியமாகாணத்திலும் பல கோயில்கள் இருந்தன. ஆனல் இவை அழிந்துவிட்டன. எனினும் இவையிருந்தன என்பதை எடுத்துக்காட்டும் விதத்தில் இவ்விடங்களிலே கண்டுபிடிக்கப்பட்ட சிலைகள் அமைகின்றன. கிங்குராம என்ற இடத்தில் அக்கினி, யமன், இந்திரன் ஆகியோரது வெண்கல விக்கிரகங்கள் கிடைத்துள்ளன. இவ்வாறேதான் மஹாகணதராவ என்ற இடத்தில் சாமுண்டி தெய்வத்தின் புடைப்புச் சிற்பமும் சப்தமாத்திரிகர்களது புடைப்புச் சிற்பமும் கிடைத்துள்ளன. மொரகொடவீவவில் நடமாடுபவர்களுடைய புடைப்புச் சிற்பம் கொண்ட ஒரு தூண், மண் விளக்குகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அநுராதபுர மாவட்டத்தில் ''வேரகல'' என்ற இடத்தில் அர்த்தநாரீஸ்வரரது விக்கிரகமொன்று கிடைத்துள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கந்தசாமிமலை, குருந்தனூர் ஆகியவற்றிலும் பொலநறுவைக் காலத்தைச் சேர்ந்த கோயில்களின் அழிபாடுகள் உள. (இந்திரபாலா, கா. 1970 : 30-40)

திரிகோணமலையில் கோணேஸ்வரத்தைவிட தம்பலகாமக் கோணேஸ்வரமும் குளக்கோட்டனுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. திரிகோணமலையிலிருந்து 25 மைல் தொலைவிலுள்ள பறையனூரிற்முன் துர்க்கையின் சிற்பம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அகஸ்தியரோடு தொடர்புடைய திருக்கரசை கங்குவேலியிலிருந்து எட்டு மைல் தொலைவிலுள்ளது. திருக்கரசைக்கு மற்ருெரு பெயர் அகஸ்தியர் ஸ்தானமாகும். இங்கே பரமேஸ்வரன் கோயிலுண்டு. மட்டக்களப்பு மாவட்டத்தில் மாகனுல் அமைக்கப்பட்ட திருக்கோயில், தான்தோன்றீஸ்வரர் ஆலயங்கள் பாண்டியர் கலைப்பாணியிலமைக்கப்பட்டன. மேலும் மட்டக்களப்பிலுள்ள ஏனைய சைவ ஆலயங்களுக்கு மாகன், குளக்கோட்டன் ஆகியோரது ஆதரவுமிருந்தது. ஆயினும் இதுபற்றி விரிவாக அறிய முடியவில்லை.

பொலநறுவைக் காலத்தில் திராவிடக் கலை முன்னைய காலத்தைவிட உச்சநிலை எய்திய காலமெனவும் கூறலாம். அநுராதபுர காலத்தில் சிங்கள பௌத்த கலையுடன் சங்கமியாது அங்குமிங்குமாகச் சிலசில அம்சங்கள் மூலமே பிரதிபலித்த இக்கலை பொலநறுவைக் காலத்தில் பௌத்த கலையோடு சங்கமித்துத் தனது செல்வாக்கை எடுத்தியம்பி நிற்கின்றது எனலாம். சோழராட்சியும், சோழரது கலைஞர்களும் இந்நாட்டிற் திராவிடக் கலை வளர்ச்சியில் பெரும்பங்கு கொண்டமை குறிப்பிடத் தக்கது. சோழர் மறைவிற்குப் பின் சோழக் கலை மரபிற் பயிற்சி பெற்ற கலைஞர்கள் திராவிடக் கலை அம்சங்களைப் பௌத்த கட்டிடக் கலையிற் புகுத்தத் தவறவில்லை. சோழராட்சி மங்கிய பின்னரும் பல தமிழ்க் கலைஞர்கள் ஈழத்தில் வாழ்ந்தார்கள் என்பதனை எடுத்துக்காட்டுவனவாகப் பதவியா, பொலநறுவை ஆகிய இடங்களிலுள்ள தமிழ்க் கலைஞர்களது தமிழிலமைந்த மேசன் குறியீடுகள் எடுத்தியம்புகின்றன. சிங்கள—திராவிடக் கட்டிடக் கலையின் சங்கமிப்புக்குப் பொலநறுவையிலுள்ள தூபராம சிறந்த உரைகல்லாக அமைகின்றது. (Bandaranayake, Senake. 1974) பொலநறுவையில் மகாபராக்கிரமபாகு அமைத்த மகாதூபி அல்லது தெமளதூபி கூடத் தமிழ்க் கலைஞர்களின் படைப்பே. இக்காலத்தில் ஆக்கப்பட்ட சந்திரவட்டக் கல்லிலும் இந்து மதச் செல்வாக்குக் காணப்படுகிறது. உதாரணமாக அநுராதபுர காலச்

சந்திரவட்டக் கல்லில் யானை, எருது, சிங்கம், குதிரை, அன்னம் ஆகியவை எல்லாம் ஒரே நிரையிற் காணப்பட பொலநறுவைக் காலச் சந்திரவட்டக் கல்லில் இவை தனி நிரையிற் காணப்படுவதோடு இந்துக்களின் புனிதப் பொருளாகிய எருது இவற்றில் இடம்பெறுவதும் ஈண்டு கவனிக்கத் தக்கது. பொலநறுவைக் கட்டிடக் கலையிற் பொலநறுவைக் காலத்தில் விக்கிரக சாலை என்ற 'பிரதிமாகர' என்ற கட்டிட அமைப்புக்கள் மலிந்து காணப்படுவதும் இந்து மதச் செல்வாக்கே எனக் கொள்ளப்படுகிறது.

பிராமணர் செல்வாக்கு முன் எப்போதுமில்லாத அளவுக்கு உயர்ந்து காணப்பட்டது. அநுராதபுர காலத்திலும் 'புரோகிதர்' பதவி அரண்மனையில் ஒரு முக்கிய பதவியாக இருந்தாலும் அரண்மனையில் பௌத்த மதத்திற்கே முக்கிய இடம் கொடுக்கப்பட்டது. ஆனால் பொலநறுவைக் காலத்திலோ எனில் அரண்மனையில் இந்துச் செல்வாக்கு மேலோங்கியதோடு புரோகிதரின் செல்வாக்கும் மலிந்தது. வடமொழிக்கு முன்னரை விட முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதோடு வடமொழி நீதி சாஸ்திரங்களை அரசியற் தத்துவமாகவும் மன்னர் கைக்கொண்டனர். மனுஸ்மிருதி, கௌடில்யனது அர்த்த சாஸ்திரம் போன்றன இக்காலத்தில் செல்வாக்குப் பெற்ற நூல்களாக மன்னரால் கைக்கொள்ளப்பட்டன. சூளவம்சத்திற் கூட வடமொழிக் காவியங்களின் செல்வாக்கு மலிந்து காணப்படுவது ஈண்டு நோக்கற்பாலது. இரண்டாவது விஜயபாகு (கி. பி. 1186 – 1187) 'பராக்கிரமபாண்டியனே (கி. பி. 1212 – 1215) ஆகியோர் மனு தர்மசாஸ்திர விதிகளுக்கமையவே ஆட்சி நடாத்தினர் எனச் சூளவம்சம் கூறுகிறது. (C. V. LXXX : 9 , 53) எனவே பிராமணர்கள் சிங்கள அரசில் பிரிக்க முடியாத பிரிவினராக விளங்கினர். இதை மனதிற்கொண்டே மெண்டிஸ் அவர்களும் பிராமணர்களின் செல்வாக்குக்கான காரணத்தைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார். ''பிராமணர்கள் பௌத்த பிக்குகளுடன் நேரடியாக மோதவில்லை. (காரணம்) இவர்கள் துறவிகளல்லர். பிராமணர்களது பிரதான கடமைகளாக வீட்டுக் கிரியைகளும் யாகம் நடாத்துவதுமே அமைந்தன. இத்தகைய கிரியைகள் தமது எல்லைக்கப்பாற்பட்டவை எனப் பௌத்த குருமார் நினைத்தனர்''. (Mendis, G. C. 1947 : 60 – 61)

இக்காலத்தில் அரச தத்துவத்தில் மனிதன் தெய்வீகத் தன்மை வாய்ந்தவன் என்ற கருத்து வலுப்பெற்றதற்கும் இந்து சாஸ்திரங்களின் செல்வாக்கே காரணம் எனலாம். சோழர் கல்வெட்டுக்களில் 'உடையார்', 'தேவர்' என்ற சொற்கள் காணப்பட்டாலும் கூட தேவர் என்ற சொல்லே பரவலாக உபயோகிக்கப்பட்டது. இம்மரபைச் சோழரின் பின்வந்த சிங்கள அரசரும் பின்பற்றினர். அநுராதபுர காலத்தில் மன்னனின் பட்டப் பெயர்களாக மகாபருமக, மகாராஜ காணப்பட்டன. ஆனால் பொலநறுவைக் காலத்தில் மகாபருமக வழக்கொழிந்தது. மகாராஜ என்பது வழக்கிலிருந்தாலும் சாம்ராஜ்ஜ தத்துவத்தை வெளிக்காட்டும் 'சக்கரவர்த்தி' என்ற சொல்லே பிரபல்யம் பெற்றுப் பொலநறுவைக் காலத்தில் திகழ்கிறது. இச்சந்தர்ப்பத்தில் சோழர் காலக் கல்வெட்டுக்களில் 'திரிபுவனச் சக்கரவர்த்திகள்' என அவர்கள் வர்ணிக்கப்படுவதும் ஈண்டு நினைவுகூரற்பாலது. இது அவர்களது வீரியச் செயல்களையே பிரதிபலிக்கின்றது எனலாம். ஈழத்திலும் அநுராதபுர காலத்தில் மன்னர்களது

பெயர்கள் பெருமளவுக்கு அவர்கள் பௌத்த மதத்தில் கொண்டிருந்த ஈடுபாட்டினைப் பிரதிபலிப்பனவாக இருக்க இக்கால மன்னர்களின் பெயர்கள் அவ்வாறின்றி அவர்களது வீரத்தன்மையைப் பிரதிபலிப்பனவாகவே உள்ளன. விஜயபாகு, கஜபாகு, விக்கிரமபாகு, பராக்கிரமபாகு போன்ற பெயர்கள் இதற்குச் சிறந்த உதாரணங்களாக அமைகின்றன. மன்னர்கள் இக்காலத்தில் தெய்வீக நிலையிலேயே வைத்துப் பேணப்பட்டனர். மனுஸ்மிருதியில் இவ்வம்சம்பற்றிக் கூறப்படுபவை இக்காலக் கல்வெட்டுக்களிலும் கூறப்படுகின்றன. இச்சந்தர்ப்பத்தில் முதலாவது பராக்கிரமபாகுவின் தேவநாகலக் கல்வெட்டில் அம்மன்னன் எவ்வாறு சித்தரிக்கப்படுகிறான் என நோக்குவது பொருத்தமானதாகும். (E. Z. III : 312–315) அது கூறுவதாவது,

> ''மூர்க்கத்தனத்திலும், அனல் கக்குகின்ற சக்தியிலும் சூரியனையும், வீரத்தில் மகேஸ்வரனையும், இறுமாப்பில் உபேந்திராவையும், அரசனுக்குரிய பண்பில் தேவர்களின் தலைவனாகிய இந்திரனையும், செல்வச் செழிப்பில் செல்வத்தின் தெய்வமாகிய குபேரனையும், உயிர்களுக்கு இன்பத்தை அருளுவதில் கீர்த்தி கிறுவையும், ஞானத்தில் தெய்வங்களின் குருவாகிய பிரகஸ்பதியையும், மென்மையில் சந்திரனையும், அழகில் கந்தர்வரையும், அன்பில் போதிசத்துவரையும் இவர் விஞ்சுகிறார்''

என்பதாகும். முதலாவது விஜயபாகுவின் அம்பகமுக பாறைக் கல்வெட்டிலும் இதே தொனி காணப்படுவதும் ஈண்டு நோக்கற்பாலது. (E. Z. II : 202–218) மனுஸ்மிருதியில் அரசர்கள் மனித உருவில் காணப்பட்டாலும் தெய்வங்களே என்று குறிப்பிடுவதுபோன்று நிஸங்கமல்லனும் தனது கல்பொத்த கல்வெட்டில் இவ்வாறு கூறியுள்ளான். இராசவாகினியில் (Saranatissa, Thera. 1899 : 45) ஆறு தெய்வங்களாகிய யமன், சூரியன், சந்திரன், மிருத்யு, குபேரன், அக்கினி ஆகியோரிலிருந்து படைக்கப்பட்டவர்கள் போன்று அரசர்கள் புவியில் நடந்துகொள்கின்றனர் என வரும் குறிப்பும் மன்னரின் தெய்வீகக் கோட்பாட்டை வலியுறுத்துவனவாக அமைந்துள்ளது. இக்காலத்தில் சாதி அமைப்புக்கூட வலுவடைந்து காணப்பட்டது எனலாம். முதலாவது விஜயபாகு சிவனொளிபாதமலையில் தாழ்த்தப்பட்டவர்கள் சென்று வழிபட உரிமையில்லாதவர்களாக இருந்ததால் அவர்களுக்கெனத் தாழ்ந்த பகுதியில் ஒரு கட்டிடத்தை அமைத்தான் என வருகின்ற கூற்றும், மாகன் நான்கு வர்ணங்களின் கலப்புக்கு வழிவகுத்தான் எனச் சூளவம்சம் கூறுவதும் இந்து மதச் செல்வாக்கால் ஏற்பட்ட சாதி அமைப்பின் வலுவைக் காட்டுகின்றன. இக்காலத்தில் இந்து மதத்தின் செல்வாக்குப் பௌத்த மதத்தில் வலுவடைந்து காணப்பட்டது எனலாம். இந்து விக்கிரகங்கள் பௌத்த வழிபாட்டிடங்களில் வைத்து வழிபடப்படவில்லை எனப் பரணவித்தான கூறினாலும் (Paranavitane, S. 1960 : 578) பிற சான்றுகள் எதிர்மாறான செய்திகளையே தருகின்றன. இதுபற்றி ஆரியபாலா அவர்களின் கூற்றை நோக்குவாம். (Ariyapala, M. B. 1968 : 184–185)

> ''பௌத்த சமயம் ஒரு தத்துவமாக இருந்ததால் சாதாரண பொது மக்களுக்குத் திண்ணியமானவற்றை அதனால் அளிக்க முடியவில்லை. அதன் விளைவாக சாதாரண மக்கள் பௌத்த சமயத்தைச் சாராத

பல்வேறு நம்பிக்கைகளையும் நடைமுறைகளையும் இந்து சமயத்திலிருந்தும் பிராமணச் சடங்கு முறைகளிலிருந்தும் தழுவினர். இவை திண்ணியமான வழிபாட்டு வடிவங்களை அவர்களுக்கு அளித்தன. இறுதியாகப் பௌத்த மதமே இத்தகைய வடிவங்களை மேற்கொள்ளலாயிற்று. இதனாற்றான் பௌத்த கோயில்களும் தாதுகோபுரங்களும் தோன்றின. சகிப்புத் தன்மை பௌத்த மதத்தில் ஓர் அடிப்படையாக இருந்ததினால் இந்த முரண்பட்ட சமய நடைமுறைகளையும் அது அனுமதித்தது. ஒரே கட்டிட அமைப்பில் இந்துத் தெய்வங்களும் பௌத்த விக்கிரகங்களும் வழிபடப்பட்டன. கர்மம் அல்லது ஊழ்வினை என்ற கோட்பாடு சாதாரண மனிதனின் அறிவிற்கு எட்டாத ஒன்றாக இருந்தது. ஆதலால் சாதாரண மக்கள் இந்துசமயத் தெய்வங்களிலும் நடைமுறைகளிலும் ஈடுபாடு கொண்டனர். ஏனெனில் இவை அவனது அத்தியாவசிய உடனடித் தேவைகளையும் அறிவுத் தாகத்தையும் நிறைவேற்றின. துன்பங்கள் ஏற்படும்போது ஓர் தஞ்சமாகவும் சகல துன்பங்களையும் தீர்க்கும் ஓர் மருந்தாகவும் மக்கள் தெய்வங்களை வழிபட்டனர். இத்தெய்வங்கள் பிரபஞ்சம் முழுவதும் வியாபித்திருந்தன என்று அவர்கள் கருதினர். இப்பண்டைய நடைமுறைகள் காலாதிகாலமாகத் தொடர்ந்து இற்றைவரை நீடித்துள்ளன''

இக்காலத்தில் பௌத்த மதம் இந்து மதச் செல்வாக்குக்கு உட்பட்டிருந்ததை மிற்றன் என்பவரும் சிறப்பான முறையில் எடுத்துக் காட்டியுள்ளார். (Mitton, G. E. 1916 : 205 – 206) அஃதாவது ''பொலநறுவையில் இந்து மதம் தூய பௌத்த கோட்பாட்டின்மீது செலுத்திவந்த ஆதிக்கம் தொடர்ச்சியாக அதிகரித்து வருவதை நாம் இங்கும் அவதானிக்கலாம். தென்னிந்தியாவிலிருந்து படைஎடுத்தோரின் தொகை பெருகப்பெருக ஒவ்வொரு படைஎடுப்பும் பின்வாங்கியபின் அது சில தனி நபர்களை இங்கே குடியமர்த்திச் சென்றது. இவர்கள் தமது சொந்த நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் இங்கு புகுத்தி இந்நாட்டுவாசிகள் மீது அந்நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் செல்வாக்கு வகிக்கச் செய்தனர். பௌத்தம் தனது தனித்துவ அம்சங்கள் சிலவற்றை இழக்க இந்துத் தெய்வங்கள் மேலும்மேலும் பௌத்த கோயில்களில் வழிபடப்படலாயின'' என்பதாகும்.

ஈழத்தில் இந்து மதம் பௌத்தத்தின்மீது கொண்டிருந்த செல்வாக்குக்கு வெளிநாட்டுப் படைஎடுப்புகள் மட்டும் காரணமல்ல. இந்நாட்டில் சிங்கள– தமிழ் மொழி பேசியோர் பௌத்தம் இங்கு வரமுன்னர் இந்துக்களாகவே விளங்கினர். பௌத்தத்தைச் சிங்களமொழி பேசியோர் தழுவினாலும் கூடத் தமது பழைய இந்து நம்பிக்கைகளையும் பேணினர். இவை நாட்டார் வழிபாடுகளாக அவர்களால் பேணப்பட்டன. அநுராதபுர அரசு காலத்தில் பௌத்த மதம் கொண்டிருந்த இறுக்கமான கட்டுப்பாட்டினால் பௌத்த மதத்துடன் இவை சங்கமிக்கவில்லை. ஆனால் பொலநறுவைக் காலத்தில் பௌத்த சங்கமும் தளர்நிலை அடைந்ததும், இந்துச் செல்வாக்குப் பல வழிகளில் செறிந்திருந்ததும் இந்துமத நம்பிக்கைகள் பரவலாகப் பேணப்படவும் பௌத்தத்துடன் சங்கமிக்கவும் வழிபிறந்தது. இதனையே சந்தேச இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன எனலாம்.

## பிற்சேர்க்கை

கடந்த நவம்பர் மாதம் (20 – 11 – 1985) இல் வெளிவந்த தினகரன் பத்திரிகையில், ''பொலநறுவையில் சோழர்கால இந்து விக்கிரகங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டன'' என்ற தலைப்பில் பின்வரும் செய்தி பிரசுரமானது. அஃதாவது;

**பொலனறுவையில் சோழர்கால இந்து விக்கிரகங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டன: கலாச்சார முக்கோணப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது.**

பொலனறுவையிலுள்ள அலஹர் பிரிவேனப் பகுதியில் கலாச்சார முக்கோணத் தொல்பொருள் ஆய்வுக் குழுவினர் ஆராய்ச்சி நடத்தியபோது சோழர் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்த இரண்டு இந்து சமய விக்கிரகங்களைக் கண்டுபிடித்துள்ளனர்.

நிலத்தைத் தோண்டியபோது பல இந்துக் கோவில்கள் இருந்த சான்றுகள் கிடைத்தன. சிவலிங்கம், ரிஷபம், நந்தி ஆகியவற்றின் பகுதிகள் முதலில் காணப்பட்டன. மேலும் தோண்டியபோது சிறப்பும் முக்கியத்துவமும் மிக்க இரு முழு விக்கிரகங்கள் கிடைத்தன. சூரிய விக்கிரகமும் திவ்யராஜன், பரசுராமர் சிலைகளும் இவை. இச்சிலைகள் காணப்பட்ட ஆலயச் சுவர்கள் செங்கல்லால் அமைக்கப்பட்டிருந்தன. சூரிய விக்கிரகம் தனிக் கல்லில் செதுக்கப்பட்டதாகும்.

மூர்த்தி நடுவேயும் அருகில் இருமருங்கிலும் சக்திகள் இருவர் காணப்படுகின்றனர். சூரிய பகவானின் கைகளிலும், சக்தியர் கைகளிலும் தாமரை மலர்கள் காணப்படுகின்றன.

இவை போன்ற சிலைகள் முன்பு இங்கு கண்டெடுக்கப்படவில்லை. பரசுராமர் விக்கிரகத்தின் கையில் கோடரி காணப்படுகிறது.

இவை பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்றும் மிகச் சிறந்த சிலைகள் என்றும் திட்ட டைரக்டர் பேராசிரியர் பி. எல். பிரேமதிலக தெரிவித்தார்.

பொலனறுவையில் காணப்பட்ட மிகப் பெரிய இந்து ஆலயமான நல்வின்னை விகாரையில் காணப்பட்ட தாமரை மலர்கள் போன்றே இவை இருப்பதாகப் பேராசிரியர் கூறுகின்றார்.

இந்த விகாரையில் காணப்படும் செங்கல் சுவர் அரவத்தின் தலை போன்றிருக்கின்றது. இது பௌத்த ஆலயமல்ல. சிவ, நடராஜ வெண்கல விக்கிரகமும், சிவலிங்கம் போன்ற இதர ஐம்பொன் விக்கிரகங்களும் முன்பு இங்கே கண்டெடுக்கப்பட்டன. இப்போது இவை அனுராதபுர மியூஸியத்தில் இருக்கின்றன.

★★★

## உசாவியவை (தமிழ்)


ஈழமுரசு (நாளிதழ்)

இந்திரபாலா, கா. *1970* இலங்கையில் திராவிடக் கட்டிடக் கலை. கொழும்பு.

*1972* யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம். கண்டி.

கந்தையா, ந. சி. *1964* மட்டக்களப்புத் தமிழகம். சுன்னாகம்.

குணசிங்கம், செ. *1973* கோணேஸ்வரம். பேராதனை.

*1978/79* ஈழத்து இந்துக் கோயில் நிர்வாகம்: பொலனறுவை வானவன் மாதேவீஸ்வரக் கோயில்.

அதிராஜேந்திரன் காலக் கல்வெட்டு. பேராதனை.

சபாநாதன், குல. *1949* யாழ்ப்பாண வைபவ மாலை கொழும்பு.

சிற்றம்பலம், சி. க. *1983* "பௌத்தத்திற்கு முந்திய ஈழத்து இந்து மதம்" சிந்தனை (புதிய தொடர்) தொகுதி 1, இதழ் 3.

*1984* ஈழமும் இந்து மதமும் – அநுராதபுர காலம் சிந்தனை (புதிய தொடர்) தொகுதி 2 இதழ் 1

சிறீனிவாசன், இ. ஆர். *1968* பள்ளிப்படை. சிந்தனை மலர் 2. இதழ் 1 (பழைய தொடர்) கல்விக்கழகம் பேராதனை. பக். 3–9 கொழும்பு.

சோமாஸ்கந்தர், வை. *1968* கோணேசர் கல்வெட்டு. திரிகோணமலை.

வீரகேசரி (நாளிதழ்)

வேலுப்பிள்ளை, ஆ. *1985* "கோணேசர் கல்வெட்டுப் பற்றிய நுண் ஆய்வுகள்" – சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள், வெளியீடு, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் மணிவிழாச் சபை வெளியீடு.

நடராசா, F. X. C. *1962* மட்டக்களப்பு மான்மியம். கொழும்பு.

## உசாவியவை (ஆங்கிலம்)


| | | |
|---|---|---|
| Arasaratnam, S. | 1964 | Ceylon (New Jersey) |
| Ariyapala, M. B. | 1968 | Society in Medieval Ceylon. Colombo. |
| Balendra, W. | 1953 | Trincomalee Bronzes. Colombo. |
| Bandaranayake, S. | 1974 | Sinhalese Monastic Architecture (Leiden) |
| Bell, H. C. P. | 1906 | Archaeological Survey of Ceylon. Annual Report. Colombo. |
| | 1908 | Archaeological Survey of Ceylon. Annual Report. Colombo. |
| C. V. | 1973 | Culavamsa. Edited and Translated by Geiger, W. (Reprinted). London. |
| E . Z. | | Epigraphia Zeylanica. |
| | Vol. II | No. 17 "Polonnaruwa Galpota-Slab Inscription". pp. 98 - 123. |
| | Vol. II | No. 25 "Polonnaruwa - Siva - Devalaya-slab Inscription" pp. 146 - 148. |
| | Vol. II | No. 28 "Polonnaruwa Slab Inscription at the North Gate of the Citadel" pp. 157-164. |
| | Vol. II | No. 29 "Polonnaruwa Priti Danaka Mandapa Rock Inscription" pp. 165 - 178. |
| | Vol. II | No. 35 "Ambagamuva Rock Inscription of Vijayabahu I pp. 208 - 218. |
| | Vol. II | No. 40 "Polonnaruwa Slab Inscripton of Velaikaras" pp. 242 - 246. |
| | Vol. II | No. 42 Kantalai Gal Asana Inscription of Kitti Nissanka Malla. pp. 287 - 288. |
| | Vol. III | No. 33 "Two Tamil Pillar Inscription from Budumuttava" pp. 302 - 312. |
| | Vol. III | No. 34 "Devanagala Rock Inscription of Parakramabahu I" pp. 312 - 325. |
| | Vol. IV | No. 24 "A Tamil Slab Inscription from palamottai". pp. 191 - 196. |

| | | |
|---|---|---|
| | Vol. V | Part. III No. 38 "Kampuruvadu - oya Pillar Inscription of Gajabahu II" pp. 394 - 404 |
| | Vol. V | No. 39 "Kahambiliyava Slab Inscription of Vikkramabahu II" pp. 404 - 408. |
| Godakumbura, G. E. | 1961 | Administrative Report of the Archaeological Commissioner for 1960. |
| | 1962 | Administrative Report of the Archaeological Commissioner for 1961/62. |
| Gonasingham, S. | 1974 | Two Inscriptions of Cola Ilankesvara Deva Trincomalee Inscriptions series No. I Peradeniya. |
| | 1975 | A Tamil Slab Inscription at Nilaveli. The Sri Lanka Journal of the Humanities Vol. I, No. I, pp. 61 - 71. |
| Indrapala, K. | 1969 | "Early Tamil Settlement in Ceylon" J. R. A. S. (C. B.) New Series Vol. XIII pp. 43 - 63. |
| | 1970 | "The origin of the Tamil Vanni Chieftaincies of Ceylon" in The Ceylon Journai of the humanities. Vol. I, No. I, pp. 111-140 |
| | 1971 | Epigraphia Tamilica Vol. I, Part. 1, Jaffna. |
| Kirubamune, S. | 1976 | The Royal Consecration in Medieval Sri Lanka. The problems of Vikkramabahu II and Gajabahu II in Sri Lanka Journal of South Asian Studies pp. 12-32. |
| Liyanagamage, A. | 1968 | The decline of Polonnaruwa and the rise of Dambadeniya, Colombo. |
| Malalasekera, G. P. | 1928 | Pali literature of Ceylon, Colombo. |
| Mendis, G. C. | 1947 | Early History of Ceylon, Calcutta. |
| Mitton, G. E. | 1916 | Lost Cities of Ceylon, Colombo. |
| Navaratnam, C. S. | 1964 | A short history of Hinduism in Ceylon. Jaffna. |
| Paranavitane, S. | 1955 | "Fragmentary Sanskrit Inscription from Trincomalee". In E. Z. Vol. V, Part I. Ins No. 14 pp. 170 - 173. |

| | | |
|---|---|---|
| | 1960 | History of Ceylon Vol. I Part II (ed), Colombo. |
| | 1973 | The Art and Architecture of Polonnaruwa Period in the Ceylon Historical Journal Vol. IV, pp. 76 - 101. |
| Pathmanathan, S. | 1979 | "Chola Inscriptions from Mantai" திருக்கேதீச்சரம் திருக்குடத் திருமஞ்சன மலர் (கொழும்பு) பக். 59 - 70. |
| | 1982 | Hinduism in Sri Lanka circa — 1000-1250, Paper submitted for the World Hindu Conference held in Colombo, Sri Lanka. |
| Rutnam, J. T. | 1979 | The Polonnaruwa Colossus A Critique of an Ancient statue. (Chunnakam) |
| Saratissa Thera (ed) | 1899 | Rasavakini, Part II. (Colombo) |
| Saturday Review | | (Weekly News paper) |
| Sitrampalam, S. K. | 1984 | The Chola Temples of Sri Lanka A study - A paper submitted for the seminar in connection with the Thousandth Coronation year of Rajaraja I in December 1984. (Tanjore) |
| Sivaramamurti, C. | 1974 | Nadaraja in Art Thought and Literature. (New Delhi) |
| Swaminathan, K. D. | 1960 | "An Inscription of Gajabahu II" in The Ceylon Historical Journal Vol. X, Nos. 1 - 4, July 1960 April 1961 pp. 43-46 |
| Veluppillai, A. | 1971 | Ceylon Tamil Inscriptions Part I Peradeniya. |
| | 1972 | Ceylon Tamil Inscription Part II Peradeniya. |